

# ஸ்ரீ லங்கா

அரசாங்க சமாச்சாரப் பகுதியால் வெளியிடப்பட்டது

மலர் : 12 இதழ் : 1 டிசெம்பர், 1959 விலை : சதம் 15



## அட்டைப் படம்



பௌத்தர்களின் புனிததலங்களுள் சிறந்து விளங்குவது அநுராதபுரம். பண்டைக் காலத்தில் இது தலை நகராக விளங்கியது. வெளிநாடுகளிலிருந்து பௌத்த பிக்குகள் இங்குவந்து பௌத்த சமய நூல்களைப் பயின்றனர். துறவிகள் பலர் இத்தலத்தைத் தரிசித்துச் சென்றமையால் இதன் புனிதத் தன்மை அதிகரித்திருப்பதாகக் கருதப்படுகிறது. இந்நகரிலிருந்து ஆட்சி புரிந்த துட்டகைமுனு அநேக சைத்தியங்களைக் கட்டியுள்ளார். ரூவான் வெலிசேயா எனப்படும் தாதுகோபத்தைப் பூர்த்திசெய்த பெருமையும் இவரையே சாரும். இது முதன் முதலில் ஒரு குமிழிவடிவினதாகவே கட்டப்பெற்றது. இதனைச் சுற்றிவர நான்கு திசைகளிலும் நான்கு தோரணவாயில்கள் எழுப்பப் பட்டுள்ளன. பண்டைக் காலத்தில் பௌத்த புனிதக்கட்டடங்கள் நிறைந்து விளங்கிய இந்நகரிலே இன்று ரூவான்வெலி விகாரை மாத்திரம் புதிய தோற்றத்துடன் காட்சியளிக்கிறது. அநுராதபுரத்தை அணுகும் எவரும் முதலில் ரூவான்வெலி விகாரையின் கோபுரத்தைக் காணத் தவறமாட்டார்கள். உலகில் நாலு புறத்திலிருந்தும் வரும் யாத்திரிகர் புனிதப் போதி விருட்சத்தையும் ரூவான்வெலிசாயா விகாரையையும் தரிசிக்கத் தவறமாட்டார்கள். புதியதோற்றத்துடன் வெள்ளைவெளேரெனக் காட்சியளிக்கும் இவ்விகாரையின் பின்னணியாகப் புதைந்த கட்டடங்களின் கற்றூண்கள் தோன்றத்தக்கதாகப் படப்பிடிப்பாளர் படம் பிடித்துள்ளார்.

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | என் இன்பமான நாட்கள் | 3 |
| 2. | குளங்களைப் பாதுகாத்தல் | 6 |
| 3. | வில்லி புத்தூரரும் மகாபாரதமும் | 9 |
| 4. | மணிமுடிப் பரிசு | 13 |
| 5. | முதலியார் சிற். கைலாசபிள்ளை அவர்கள் | 17 |
| 6. | வனபரிபாலன ஆராய்ச்சி | 20 |
| 7. | வெற்றிலை | 21 |
| 8. | யாத்திரை | 24 |
| 9. | அறநூல்களும் பக்திப்பாடல்களும் | 27 |


1—J. N. R 7417—5,508(1/60)

# என் இன்பமான நாட்கள்

[பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை]

நான் 1930 ம் ஆண்டில் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திலே தமிழ் வித்துவான் வகுப்பில் மாணவனுகச் சேர்ந்தேன். அப்பொழுது விபுலானந்த அடிகள் தமிழ்ப் பேராசிரியராக அங்கு இருந்தார்கள். பல ஆண்டுகளாக உயர்தர கல்விக்குச் சென்னைப் பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்பட்டிருந்த ஸ்ரீ மீனுட்சிக் கல்லூரி அக்காலத்துக்குச் சில ஆண்டுகளுக்கு முன்னர்தான் அண்ணுமலைப் பல்கலைக் கழகமாக மாற்றி அமைக்கப்பட்டது. அப்பொழுது தில்லையிலேயிருந்த சங்கதக் கல்லூரியும் தமிழ்க் கல்லூரியும் திருவேட்களமாகிய அண்ணுமலை நகருக்கே கொண்டு செல்லப்பட்டன. போதிய கட்டிடங்கள் இல்லாமையால் கொட்டில்கள் சில அமைத்து, அங்கே மாணவரை வைத்துப் படிப்பித்தனர். சங்கதக் கல்லூரிக்கு இராம பிசர்ரடி என்பார் தலைமைதாங்கினர். தமிழ்க் கல்லூரிக்கு விபுலானந்த அடிகள் பேராசிரியராக இருந்தனர். இராம பிசாரடியாருடன் மகாமகோபாத்தியாயர் தண்டபாணி தீட்சிதர் அவர்களும் சங்கதக் கல்லூரியில் கடமை ஏற்று நடத்திவந்தனர்.

விபுலானந்த அடிகளோடு அக்காலத்திலே திறமை வாய்ந்த செந்தமிழ்க் கலைச்செல்வர் மாணவருக்குக் கல்வியூட்டி வந்தனர். அப்பெரியார்களுள் இப்பொழுது சென்னைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப் பேராசிரியராக கடமையாற்றிவரும் திருவாளர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களும் ஒருவர். திருவாவடுதுறை வித்துவான் பொன்னேதுவார் மூர்த்திகள், இராமநாதபுரம் சர்க்கரை இராமசாமிப் புலவர், திருச்சி இறையொளி சிவப்பிரகாசம்பிள்ளை, சோழவந்தான் கிண்ணிமடம் கந்தசாமியார், மீனுட்சி சுந்தரம்பிள்ளையவர்களின் மாணுக்கரான பலராமையர் முதலிய பெருமக்கள் அந்நாட்களில் பல்கலைக் கழகத் தமிழ்க்களரியை அலங்கரித்து வந்தனர்.

சர்க்கரை இராமசாமிப் புலவர் அவர்கள் புராண இதிகாசங்களுக்குப் பொருள் சொல்லிவந்தார். பொன்னேதுவார் மூர்த்திகள் தொல்காப்பியம் செய்யுளியல், யாப்பருங்கலவிருத்தி, திருக்கோவையார் நன்னூல் விருத்தியுரை முதலியவற்றை அருமையாக மாணவருக்கு அறிவுறுத்தினர். கந்தசாமியார் அவர்கள் இலக்கணப் பாடங்களை நடத்திவந்தார். பலராமையர் அவர்கள் திருக்குறள், புறநானூறு முதலிய சங்க நூல்களுக்குப் பாடஞ்சொல்லிவந்தார். இப்பெருமக்கள் யாவரும் தத்தம் கல்வித் துறைகளில் ஒப்பாரும் மிக்காருமின்றித் திகழ்ந்து வந்தனர். இக்காலத்துப் புலவர்கள் போலப் பட்டத்துக்காகப் படித்தவர் அல்லர். கல்வியின் மேல்வைத்த அவாவினுல் அதைக் கருத்தூன்றிப் படித்தறிவுமிக்கவர். ஆடு தழை கடித்தாற்போன்ற புலமையன்று அவர் புலமை. தாம் எடுத்துக்கொண்ட வற்றைத் துறைபோகக் கற்றவர். இப்புலவர் பெருமக்களின் உருவங்கள் இன்றும் என் கண்முன் நின்று நிலவும். அவர் கூறிய அருமையான பொருள் செறிந்த இன்சொற்கள் இன்றும் என் காதுகளில் நின்றெலிக்கும்.

இப்பெரியார் யாவரும் வகுப்புகளிலே இருந்து கல்வியூட்டுவ தோடமையாது, மாணுக்கரோடு ஒன்றுபட்டு நல்லாய்ப் பழகிவந்தனர். வாழ்க்கையில் தமக்குற்ற இன்னல்களை மாணுக்கர் அடிகளிடம் கூறி, அவற்றை அகற்றுவதற்கு அவர்கள் மொழியும் நல்லுரையைக் கேட்டு ஒழுகுவர். கந்தசாமியார் கல்வி நிலயத்தை விட்டுத் தம் இருப்பிடமாகிய தில்லைக்கு ஏகும் பொழுதும் மாணவர் அவரிடம் இலக்கண விடயங்களைப் பற்றியே பேசிக் கொண்டு போவர். பொன்னேதுவார் மூர்த்திகளின் இல்லம் ஏகினுலோ அவர்கள் அவரை அன்பாதரவாய் வரவேற்றுத் தமிழ்நாட்டுப் பழைய வித்துவான்களைப் பற்றிய செய்திகளை எல்லாம் எடுத்துக் கூறக் கேட்கலாம். ஒரு முறை நான் அவர்கள் இல்லத்துக்குச் சென்றேன். அப்பொழுது அவர்கள் பல விடயங்களோடு தம்முடைய வாழ்க்கை வரலாற்றிலும் ஒரு சிறு பகுதியை எடுத்துக் கூறினுர்.

ஓதுவார் மூர்த்திகள் திருவாவடுதுறையிலுள்ள ஓதுவார் ஒருவரின் புதல்வர். இளம் வயதிலே திருவாவடுதுறை மடத்திலேயே கல்வி பயின்று கொண்டிருந்தார்கள். ஒரு முறை ஆறுமுகநாவலர் அவர்களின் மருகரான பொன்னம்பலபிள்ளை அவர்கள் (பொன்னையா உபாத்தியார்) திருவாவடுதுறை சென்றனர். அங்கு போகும்போதெல்லாம் அவர் பலப் பல பொருள்களைப் பற்றியும் விரிவுரைகளாற்றுவது வழக்கம். அதுமட்டுமன்றி, ஆதீனத்தில் அவர் தங்கியிருக்கும் போது மாணவர் அவரிடம்

சென்று தம்முடைய சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவர். அவர்களோடு ஓதுவார் மூர்த்திகளும் சென்று தாம் படித்த பாடங்களிலுள்ள சந்தேகங்களைக் கேட்டுத் தெளிந்தார். அப்பொழுது பொன்னம்பல பிள்ளையோடு சில நாள் இருந்து பாடங்கேட்கவேண்டுமென்ற அவா ஓதுவார் மூர்த்திகளுக்குண்டாயது. பொன்னையா பிள்ளை அவர்கள் இருப்பது யாழ்ப்பாணத்தில். யாழ்ப்பாணம் எங்கே, திருவாவடுதுறை எங்கே? அன்றியும், தந்தைக்கு ஒரே ஒரு மகன்; தம்மைவிட்டுச் சிறிதும் பிரியவொட்டார். இதை எல்லாம் எண்ணிவிட்டுப் பிள்ளையவர்கள் யாழ்ப்பாணம் திரும்பியதன் பின், தன் நண்பன் ஒருவனைத்தவிர வேறொருவருக்கும் தெரியாது ஒளித்து யாழ்ப்பாணம் சென்று அவர்களிடம் சில காலம் கல்வி பயின்றதாகக் கூறினர். இத்தகைய ஆசை அப்பெரியாருக்குக் கல்வியில் இருந்தது.

சர்க்கரைப் புலவர் அவர்களோ நகைச்சுவைக் களஞ்சியம். அவர் உரையாடலைக் கேட்பதற்காக மாணவர் எப்பொழுதும் அவரைச் சுற்றி நிற்பர். சேதுப்பிள்ளை அவர்களும் புலவர் அவர்களும் நாள்தோறும் பின்னேர வேளைகளில் நடேசப் பெருமானைத் தரிசிப்பதற்குத் தில்லைக்குப்போவது வழக்கம். அப்பொழுது அவ்விரு பெரியார்களுடன் மாணவர்களும் கூடிச் சென்று புலவர் அவர்களின் நகைச்சுவை நிரம்பிய உரையாடல்களைக் கேட்டு மகிழ்வர்.

இறையொளி சிவப்பிரகாசம்பிள்ளை அவர்கள், இப்பெரியார்கள் யாவருக்கும் வேறுன மனப்பான்மை உடையவர். மாணிக்கநாய்க்கர் கூட்டத்தைச் சேர்ந்து தமிழுக்காக மிகவும் உழைத்தவர். ஆங்கிலமும் நன்கு கற்றவர். புதுமுறையான எண்ணங்களை உடையவராகையினால் அவர் கொள்கைகள் அக்காலத்து மக்கள் கொள்கைகளுக்கு முரண்பாடாக இருந்தன; எனினும் தமது கொள்கைகளை நிலைநிறுத்தி மிகுந்த நகைச்சுவையோடு சொல்லாடும் வன்மையுடையவர்.

சிறிது காலத்தில் கொட்டில்களிலிருந்த தமிழ்க் கல்லூரியும் சங்கதக் கல்லூரியும் பல்கலைக் கழகக் கட்டிடத்துள்ளேயே போய்ச் சேர்ந்தன. அதனுல் அக்கல்லூரிகளில் பழைய முறைப்படி வேட்டி சால்வை அணிந்து வந்து கல்வி கற்பித்த ஆசிரியர்களுக்குப் பெரிய இடர்ப்பாடாக இருந்தது; ஏனெனில், அவர்கள் தாம் வழக்கமாக அணியும் வேட்டி சால்வையோடு தம்முடலை மறைக்கச் சட்டையும் அணிய வேண்டி வந்தது. தமது உடையில் பழைய முறையையே இதுகாறும் தழுவிவந்த பொன்னுேதுவார் மூர்த்திகளும் கந்தசாமியாரும் சட்டை அணிந்து தலைப்பாகை தரித்துப் பல்கலைக் கழகத்துக்கு வந்த முதல் நாள் அவர்களைப் பார்க்க எமக்கும் எம்மோடு படித்த மாணவர்களுக்கும் பெருவியப்பாய் இருந்தது.

நான் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்துக்குச் சென்ற முதல் ஆண்டிலேயே அங்கு நடந்த ஒரு சிறப்பான நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகின்றது. இது காறும் பாரதியார் பாடிய பாடல்கள் யாவும் புலவர்களால் இலக்கண வழு நிறைந்தவை என்றும், பழைய யாப்பு அமைதிக்கு அமையாதவை என்றும் ஒதுக்கப்பட்டு வந்தன. ஆனல் விபுலானந்த அடிகள் போன்ற அறிஞர்கள் பாரதியாரின் பாடல்களின் உண்மைத் தன்மைகளை அறிந்திருந்தனர். அதனுல் விபுலானந்த அடிகளின் தலைமையில் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் பாரதியார் சங்கம் என்னும் பெயருடன் ஒரு கழகம் நிறுவப்பட்டது; இதன் முதற் கூட்டம் நிகழ்ந்தது சங்கீதக் கல்லூரியில். விபுலானந்த அடிகள் பாரதியாரைப் பற்றி ஓர் அரிய சொற்பொழிவு ஆற்றிக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினர். அடிகள் விரிவுரை ஆற்றும்போது தமது கோட்பாட்டுக்கு மேற்கோளாகப் பாரதியாரின் பாடல்களைப் பாடுவித்தார்கள். அவற்றைப் பாடியவர்கள் பல்கலைக் கழகத்தில் ஆங்கில மொழி விரிவுரையாளர் மயிலேறு என்பாரும் விசுவநாதன் என்பாரும் ஆவர். அன்று தொடக்கம் பாரதியார் சங்கம் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் ஓங்கி வளர்ந்து வந்தது. அதனேடு பாரதியாரின் புகழும் தமிழ் நாடெங்கணும் பரவியது.

அந்நாட்களில் சாதிவேற்றுமை மிகக் கடுமையான நிலையிலிருந்தது. அண்ணுமலை நகருக்கருகிலுள்ள ஆதித் திராவிட மக்கள் குடியிருக்கும் சேரிகளுக்கு மேல் சாதியாரென எண்ணிக்கொள்வோர் போவது வழக்கமில்லை. அப்படி எவரும் அங்கு செல்லநேரிடின், திரும்பி வந்தவுடன் உடை மாற்றி முழுகுதல் வேண்டும். அவ்வாறு முழுகாதுவிடின் தீட்டுக் குற்றத்துக்கு ஆளாவர். அதனுல் அச்சேரிகளுக்கு ஒருவரும் போவதில்லை. இதைக் கண்டு அடிகளும் சில முற்போக்கான மாணவரும் ஒன்றுகூடி, அச்சேரிகளில் வதியும் சிறுவர்களை அண்ணுமலைப் பல்கலைக் கழகத்து கட்டிடத்துள்ளேயே கொண்டுவந்து ஆசனங்களிலிருத்தித்

தமிழ் சொல்லிக் கொடுத்தனர். அவ்வாறு தமிழ் சொல்லிக் கொடுக்கும்போது அவர்களுக்கு முதன் முதற் சொல்லிக் கொடுத்தது மேல்வரும் பாரதி பாட்டாகும் :

**அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே**
**இச்சகத் துளோரெலாம் எதிர்த்துவந்த போதிலும்**
**அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே.**

நான் பல்கலைக் கழக விடுதிச்சாலையில் இருந்து வந்தேன். பார்ப்பனரல்லாதார் உண்ணும் உண வில்லத்திலேயே எனக்கு உணவு. அங்கு கிருஷ் ணையர் என்பவர் உணவு அளித்தார். அவரே பல் கலைக் கழகத்துத் தலைமை அட்டலாளர். அடிசில் ஆக்குவதில் கைதேர்ந்தவர். அவர் ஆக்கும் இரச மும் பாயசமும் மிகச் சுவையுள்ளவை என்று எவ ரும் பாராட்டுவர். அன்பும் ஆதரவும் உள்ளவர். மற்றைய உணவு இல்லங்களில் வழங்கப்படும் அடி சிலினும் பார்க்க எங்கள் உணவில்லத்தில் வழங் கப்படும் அடிசில் மிகத்திறமானது என்பதன் நிமித்தம் எம் உணவு இல்லத்துக்கு ஏனைய உணவு இல்லங்களினின்றும் மாணவர் பலர் அடிக்கடி வந்து அடிசில் அருந்துவர்.

பின்னேர வேளைகளில் பெரும்பாலும் நடராசர் கோயிலுக்குச் செல்வோம். அங்கு சென்று திரும் பும்போது தில்லைக் கோயில் வீதியிலேயுள்ள உண வுக்கடையொன்றில் பகோடா வாங்கி வருவோம். முதலியார் ஒருவர் அவ்வுணவுக் கடையை நடத்தி வந்தார். அதனுல் அப்பகோடாவை "முதலியார் பகோடா" என அழைப்பர். அக்கடையிலே செய் யும் பகோடா அந்நாட்களில் மிகப் பேர்பெற்றது. கழக விடுதிச் சாலைக்கு நாம் தில்லையிலிருந்து திரும்பி வரும்போது எமது நண்பர் யாவரும் எம்மைச் சூழ்ந்து நின்று "பகோடா வாங்கி வந் தீர்களா" என்று தொந்தரவு செய்வர்.

இராக்காலம் வந்ததும் உணவருந்தியபின் கூட் டம் கூட்டமாகச் சேர்ந்து படிப்போம். தெரியாத வற்றை மறுநாள் எம்மாசிரியரைக் கேட்டுத் தெளிந்துகொள்வோம். நான் கல்வி பயிலும்போது எனக்குப் பல்கலைக் கழகத்தில் நண்பர் பலர் இருந் தனர். அவரோடு நான் கழித்த நாட்கள் மிக இன்பமானவை. அந்த நாட்களைப்போல் இன்பமான நாட்கள் என் வாழ்நாளில் இனி வருமோ ?

(இளங்கதிர்)

# சக்தியும் அதன் மாற்றமும்

**யுனெஸ்கோ கண்காட்சி**

"சக்தியும் அதன் பரிமாற்றமும்" என்ற பொருள்பற்றிய யுனெஸ்கோவின் அசைகூற்றுக் கண்காட்சி கொழும்பிலுள்ள தேஸ்ரன் கல்லூரி யில் டிசம்பர் மீ 7 ஆம் திகதி தொடக்கம் நடை பெறுகிறது.

நத்தார் தினமான டிசம்பர்மீ 25 ஆம் திகதி தவிர்ந்த ஏனைய நாட்களில் கண்காட்சி மூன்று வேளைகளில் திறந்திருக்கும். அவை :

காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை.

பிற்பகல் 2 மணி தொடக்கம் 5 மணிவரை.

பிற்பகல் 5.30 மணி தொடக்கம் இரவு 8.30 மணிவரை.

காலை, பிற்பகல் வேளைகள் மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. இரவு வேளையின்போது கண் காட்சியை பொதுமக்கள் சென்று பார்க்கலாம். காலை யிலும், பிற்பகலிலும் மாணவர்கள், ஆசிரியர்கள் இக்காட்சியை இலவசமாகப் பார்ப்பதற்கு அனுமதிக் கப்படுவர்.

யுனெஸ்கோவினது இலங்கை தேசீய கமிஷன் கல்வி இலாக்காவின் தொழில்நுட்பக் கல்விப் பிரி வின் ஒத்துழைப்புடன் இக் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்தது. இக் கண்காட்சி பெரும்பாலும், கல்வி சம்பந்தமானதேயாகும். எமது பாடசாலைகளில் விஞ் ஞான போதனையை அபிவிருத்தி செய்வதில் அரசாங் கம் அதிக சிரத்தைகாட்டி வரும் இந்நாட்களில் இக் கண்காட்சியும் நடைபெறவிருக்கிறது.

இக்காட்சி பல நாடுகளில் காட்டப்பட்டுள்ளது. கல்வி முக்கியத்துவம் வாய்ந்த கண்காட்சி என்ற பெரும் புகழைச் சம்பாதித்துக்கொண்டு அது இலங் கைக்கும் வந்துள்ளது. விஞ்ஞானம் பயிலும் மாண வர்களும், பொதுமக்களும் இதனுல் பெரும் பய னடைவார்கள்.

விஞ்ஞானம் பயிலும் மாணவர்களுக்கு இக்கண் காட்சி மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்ப தால், அத்தகைய மாணவர்களுக்கு முன்னிடம் கொடுக்குமாறு கண்காட்சியை ஏற்பாடு செய்தவர் ஆலோசனை கூறுகிறார்கள்.

# குளங்களைப் பாதுகாத்தல்

**விவசாய, காணி மந்திரி அவர்களின் வானொலிப் பேச்சு**

வடகீழ்ப் பருவக்காற்று வழக்கத்திலும் பார்க்க முன்னரே வீசத் தொடங்கி விட்டதால், குறிப்பாக நவம்பர் மாதக் கடைசியில் மழை வீழ்ச்சி வழக்கத்திலும் பார்க்க மிகவும் அதிகரித்துள்ளது. டிசம்பர் மாதத்திலும் மழை வீழ்ச்சி அதிகரிக்குமானல், 1957 ம் ஆண்டில் ஏற்பட்ட பெருவெள்ளப் பெருக்கு மீண்டும் ஏற்படக் கூடும் என்ற பயமுண்டு. 1957 ம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினல் நீர்ப்பாசனப் பகுதி குறிப்பிடத்தக்க அனுபவம் பெற்றுள்ளது. எனவே, அத்தகைய பெருங் கஷ்டம் நூற்றுண்டில் ஒரு முறைதான் வரக்கூடுமாதலால், அவ்விதம் எதுவும் ஏற்படாதென நீர்ப்பாசனப் பகுதி கருதுகிறது. வழிநீர் வாய்க்காலால் வெள்ளம் கடுமையாக வழிந்து குளக் கட்டில் உடைப்பு ஏற்படக் கூடியதாக இருக்கின்ற ஒரு குளத்தின் விஷயத்தில், குளக்கட்டில் பாதுகாப்பான இடத்தில் ஏற்கெனவே வேண்டுமென்று ஓர் உடைப்பை உண்டாக்கி விட்டால், குளக் கட்டின் மேற்பகுதியால் வெள்ளம் பெருகி சேதம் ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ள முடியும். இயற்கை நிலம் வழிநீர் மட்டத்துக்கு உயரமாகவுள்ள பகுதியில் குளக்கட்டின் ஒரு கோடியில் உடைக்குமிடத்தைக் கவனமாகத் தெரிவு செய்ய வேண்டும். அது மக்களுக்கும் பொருட்களுக்கும் வெள்ளப் பெருக்கால் சேதம் ஏற்படாத முறையில் தெரிவு செய்யப்பட வேண்டும். இந்தக் கொள்கையை மேற்கொண்டதன் மூலம் 1957 ம் ஆண்டின் வெள்ளப் பெருக்கின் போது மின்னேரியா, கிரித்தலை, பராக்கிரம சமுத்திரம், மகாவிலாச்சிய போன்ற பெரிய குளங்களைப் பாதுகாக்கக் கூடியதாக விருந்தது. நீர்ப்பாசனப் பகுதியாற் பேணப்படும் பெரிய குளங்களைப் பாதுகாப்பதற்கு அப்பகுதி ஏற்கெனவே ஒழுங்கு செய்துள்ளது.

கிராமப் பயிர்ச் செய்கை உத்தியோகத்தரின் கட்டுப்பாட்டின் கீழ் விவசாயிகளால் பேணப்படும் சிறு குளங்கள் விஷயத்திற்றான் கஷ்டமுண்டு. இவற்றின் விஷயத்தில் கிராமப் பயிர்செய்கை உத்தியோகத்தர்களும், விவசாயிகளும் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

(1) ஒவ்வொரு குளத்தின் வழிநீர் வாயிலையும் பரிசோதித்து, நீர் தங்குதடையின்றி வழிந்தோடக் கூடியதாக வைத்திருக்க வேண்டும். எனினும், கமவிதானைமாரும் பங்காளிகளும் இவ்வாறு செய்துள்ளார்களா என்பதை மீண்டும் கவனிக்கவும்.

(2) குளக்கட்டிலுள்ள பள்ளங்களையும், அடிப்பாதைகளையும், குறுக்குப்பாதைகளையும், கால்நடைகளால் சேதமுற்ற இடங்களையும், குளக் கட்டின் அடியிலிருந்து நுனிவரை கவனித்துத் திருத்த வேண்டும். இதை மீண்டும் சரிபார்த்துக் கவனித்தல் நல்லது.

(3) நீர்த்தூம்புகளிற் கதவுகள் நல்ல நிலையில் இருக்கின்றனவா என்பதை நன்ருகக் கவனித்துக் கொள்ள வேண்டும்.

(4) அணைக்கட்டுகளிலும் வழிநீர் வாயில்களிலுமுள்ள பலகைகள் யாவற்றையும் அவ்விடங்களிலிருந்து நீக்கி நல்ல பத்திரமான இடத்தில் கொண்டுபோய் வைக்கவேண்டும்.

(5) குளக்கட்டை எந்த இடத்தில் உடைத்தால் நல்லது என்பதை முன்கூட்டியே தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

(6) குளத்திலுள்ள நீர் கரையை மீறிப் பாயும் நிலைக்குவந்ததும் கிராமப் பயிர்ச் செய்கை உத்தியோகத்தரும் கமவிதானைமாரும் அரசாங்க ஏசென்டருடனும், நீர்ப்பாய்ச்சல் உதவிப் பிரிவதிகாரியுடனும் தொடர்பேற்படுத்திக் கொள்ள வேண்டும்.

(7) குளத்திலுள்ள நீர் ஆபத்தான நிலையை அடையாதபடி நீர்த்தூம்புக் கதவுகளை உபயோகப் படுத்த வேண்டும்.

(8) வெள்ளத் தடுப்புக்கு மணல் மூட்டைகளை உபயோகிக்க வேண்டிவரலாமாதலால், போதிய சாக்குகளைச் சேகரித்து ஆபத்தான இடங்களில் கொண்டுபோய் வைத்துக் கொள்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டும்.

(9) மேற்கூறிய நடவடிக்கைகளை எடுத்தபின்னரும் நீர்மட்டம் உயர்ந்துகொண்டே போனால், குளக் கட்டை மீறி நீர் பாய்வதைத் தடுப்பதற்காக முன்னரே தீர்மானித்த இடத்தில் குளக்கட்டைஉடைப்பது அவசியமாகலாம். ஆனால் இந் நடவடிக்கையை அரசாங்க ஏசென்டருடனும், பிரிவு நீர்ப்பாய்ச்சல் பொறியியலாளருடனும் கலந்தாலோசித்து அவர்களின் அதிகாரம் பெற்ற பின்னரே செய்தல் வேண்டும். இத்தீர்மானம் பெருவெள்ள மட்டத்தை நீர் மீறத் தொடங்கிய பின் அல்லது கட்டுக் கரையின் உச்சிக்கு ஒரு அடிக்குள்ளாக வெள்ளம் உயரத் தொடங்கிய பின்னரே சாதாரணமாகச் செய்யப்படும். கட்டை உடைத்தபின் அவ்வுடைவுக்குள்ளாகப் பாயும் நீர் குளத்துக்கு அருகாமையிலுள்ள குடியிருப்புப் பிரதேசத்துக்குச் செல்லாத வகையில் பாய்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

இந்நடவடிக்கை குளங்களையும், மக்களின் உயிர்களையும் பொருட்களையும் பாதுகாப்பதற்காகவே எடுக்கப்படுகிறது. அத்துடன் இதன் மூலம் குளங்களில் தேங்கி நிற்கக் கூடிய நீரின் முழு அளவும் தேங்கி நிற்கவும் இடமேற்படுகிறது. இதுவரை கிடைத்த புள்ளி விபரங்களின்படி இப்பருவ காலத்தில் பெரிய வெள்ளமெதுவும் ஏற்படுமென்று எதிர்பார்க்கப்படவில்லை. இப்பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டபோதும், நாம் பெரும் பீதி கொள்ளுவதற்கு எவ்வித காரணமுமில்லை.

---

# செந்தமிழ் அன்னை

[பண்டிதமணி சு. நவநீதகிருஷ்ணபாரதியார்]

1. பாட்டைப் பாடிக் கதையுரைத்துப்
   பல நாடகத்தை நனிநடித்து

   நாட்டார் மறந்து சிதையாமல்
   நம்முன் னோர்தம் வாழ்க்கையெல்லாம்

   கூட்டிக் கொணர்ந்தெங் கன்னெஞ்சைக்
   குழைவித் திழந்த திருவெல்லாம்

   ஈட்டிக் கொடுக்கு முனதருளை
   என்றும் மறவோம் ; தமிழ்த்தாயே !

2. ஒரும் புறவுக் குயிர்விடுத்த
   உரவோன் கன்றி னுயிர்க்காகத்

   தேரை மகன்மேற் செலுத்தியுய்ந்த
   செல்வன் நண்ப னிறந்ததற்கா

   நீரும் பருகா தசையாமல்
   நின்றங் காவி தருகபிலன்

   சாரு மிவர்க்காந் தருமமுறை
   தலையன் புரைத்தாய் தமிழ்த்தாயே !

3. காதற் கணவன் வெட்டுண்ட
   கனலால் யாழைத் தீய்த்துத்தன்

   போதார் குழலைச் சிதைத்துத்தன்
   பொல்லாக் குலத்தின் மாசழித்த

   தீதே யில்லா மாதவியைச்
   சீறுங் கற்புக் கண்ணகியை

   ஓதிப் புகழ எமக்களித்த
   உதவி மறவோம் ; தமிழ்த்தாயே !

4. செல்லற் கியலா இடமெல்லாம்
   சேர்ந்து களித்தோம் ; நினதருளால்

   புல்லற் கியலாப் பொருளையெலாம்
   புல்லிக் களித்தோம் நினதருளால்

   வெல்லற் கரிய வென்றி யெலாம்
   மேவிச் சிறந்தோம் நினதருளால்


   அல்லுள் மதியே பகற்போ துக்
   கருஞ் செங்கதிரே தமிழ்த்தாயே !

5. சிறந்த வீரர் வரலாற்றைச்
   செப்பு முகத்தால் அச்சமெலாம்

   துறந்து மீளாப் புல்லடிமைத்
   தொந்தங் களைந்து மீட்பித்தே

   இறந்த பெயரை எழுப்பித்த
   இயல் போல்வீர மெழச் செய்து

   பிறந்த பயனை யெமக்கூட்டும்
   பேறே ! வாழி தமிழ்த்தாயே !



பிரதமர் அஸ்கிரியா பௌத்தமதப் பிரிவுத் தலைவருக்கு பௌத்தர்கள் தானமாகக் கொடுக்கும் எட்டுப்பொருட்களை வழங்குகிறார்.

# வில்லிபுத்தூரரும் மகாபாரதமும்

(திரு. சோ. சிவபாதசுந்தரம் அவர்கள்)

மகாபாரதம் வடமொழியிலே வியாச முனிவராற் செய்யப்பட்டது. அதனைத் தமிழிலே மொழிபெயர்த்தவர்கள் பெருந்தேவனுர், வில்லிபுத்தூராழ்வார், நல்லாப்பிள்ளை, அம்பலத்தாடுமையர், அஷ்டாவதானம் அரங்கநாதக் கவிராயர் என்போர். இவர்களுள் மிகச் சிறந்த நூலை இயற்றியவர் வில்லிபுத்தூரார் என யாவராலு மொப்புக்கொள்ளப்பட்டதாகும். வில்லிபாரதம் சொற்சுவை, பொருட்சுவையென்றின்ன பிற ஒருங்கமையப்பெற்றது.

வில்லிபுத்தூரார் ஒரு வைஷ்ணவப் பிராமணர். கோயாம்புத்தூரிலே, சனியூர் என்ற இடத்தைச் சேர்ந்தவர். தமிழிலே திருப்புகழ் பாடிய அருணகிரிநாதரும் இவரும் ஒரேகாலத்தவர். அக்காலத்திலே புலவர்கள் பலவகைச் சந்த விருத்தங்கள்பாடுதலில் ஈடுபட்டனர். இவருடைய நூலிலே பல வகையான சந்த விருத்தங்களைக் காணலாம். திருப்புகழ்ச் சந்தத்தையொட்டியன பல இவர் பாரதத்திலுங் காணலாம்.

அருணகிரிநாதர் பாடிய கந்தரந்தாதி என்னும் நூலுக்கும் உரைசெய்தவர் இந்த வில்லிபுத்தூரரே யாகும். இந்த அந்தாதி முழுவதும் யமகம், அதாவது, ஒவ்வொரு செய்யுளிலும் நாலு அடிகளும் ஒரே முதலைக் கொண்டதாகவிருக்கும். இந்தக் கந்தரந்தாதியின் 54 ம் கவியாகிய “ திதத்தை” என்று தொடங்கும் செய்யுளுக்கு உரைசொல்லும்போது திகைத்தாராம். இந்த வில்லி புத்தூரார் தம்மொடு உரையாடித் தோற்றோடும் புலவர்களது காதுகளை வெட்டுவது வழக்கமாம் என ஒரு கதை உண்டு. வில்லிபுத்தூரரும் தனது தோல்வியை ஒப்புக்கொண்டு, தனது செவியினை வெட்டும்படி அருணகிரியிடம் தான் வைத்திருந்த அங்குசத்தைக் கொடுத்தாராம். “ குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியனில்லை........குறும்பியளவாக் காதைக்குடைந்து தோண்டி எட்டினமட்டறுப்பதற்கோ வில்லியில்லை ” என்னுஞ் செய்யுளான் இது அறியலாகும். இவ்வாறு உண்மையிலேயே, புலமைத் தருக்குக் கொண்ட வில்லிபுத்தூராரது புகழ் நாடெங்கும் பரவியது.

அக்காலத்து, கொங்குநாட்டை யாண்டான் வரபதி யாட்கொண்டான் என்னும் சிற்றரசன். அவன் இப்புலவரது, கல்வியறிவையும், புலமையையும் கேள்வியுற்று வரவழைத்து தமது சமஸ்தானத்துத் தலைமை வித்துவானுக்கினுன். அக்காலத்தில் அவ்வரசன் வியாசபாரதத்தினைத் தமிழில் மொழிபெயர்க்குமாறு வேண்டினன். புலவராய வில்லியும் அக்கால வழக்கிற்கேற்ப விருத்தப்பாக்களால் பாடினுர் என்பர். இவ்வரலாறு வில்லிபாரதத்திலே, அவர் மகனுர் வரந்தருவார் என்பாரியற்றிய பாயிரச் செய்யுள்களானறியப்படும்.

தமிழ் நாட்டிலே, கிருஷ்ணனை—கண்ணனை—தெய்வமாகக் கொண்டாடும் நூல்கள் பாரதம், இராமாயணம், பாகவதம் என்பன. இந்நூல்களை விஷ்ணுபக்தியுடையவர்கள் பெரிதும் போற்றி மதிக்கிருர்கள். சிவனையே முழுமுதற் கடவுளாகக் கொண்டாடுகின்ற சைவர்களும் கண்ணனிலே மிகுந்த பிரேமையுடையவர்களாகக் காணப்படுகிருர்கள். நம்மவர்களுட் சிலர் குழந்தை முருகனைப் பக்தி பண்ணுகிருர்கள். அங்ஙனமே கண்ணனிலும் பக்தி செலுத்துகிருர்கள். கிருஷ்ண பரமாத்மா, அருச்சுனனுக்கு ஹிதோபதேசஞ் செய்த பகுதியாகிய “ கீதாபோதனை ” யுமிந்தப் பாரதத்தில் மிளிர்தல் கண்டு மகிழத்தக்கது. இத்தகைய நூலிலே, சிவபெருமானைப் பற்றியும் சில இடங்களிற் குறிப்பிடப்பட்டிருப்பது காணலாகும். வில்லிபுத்தூரார், விஷ்ணுபக்தராயினும், சிவனைக் குறிக்குமிடங்களில் சிவனுர்க்கு ஏற்றங்கொடுத்து, உண்மைச் சைவர் போலவே காட்சியளிக்கிருர். இதனுல் வில்லிபுத்தூரார், “ கடவுளை எப்பெயர் கொண்டு அழைக்கினும், அவர் ஒருவரேயொருவர் ” என்ற கொள்கையுடையராயும், மதத்துவேஷமில்லாதவராயும் பரந்த போக்குடையராயும், சமயப் பொறையுடையராயும் காணப்படுகிருர்.

கம்பர் தமது இராமாயணத்திலே தம்மைப் போஷித்துவந்த சடையப்பவள்ளலின் பெயரை ஆங்காங்கு பெய்து பாடியதுபோல, நமது வில்லிபுத்தூரரும் தம்மை ஆதரித்த கொங்குநாட்டரசனுன வரபதி ஆட்கொண்டானின் பெயரையும் இடையிடையே நுழைத்துப் பாடியிருக்கிருர் பாரதத்தில்.

**‘‘ கோவல்சூழ் பெண்ணைநாடன் கொங்கர்கோன் பாவைவேந்தன்**
**பாவலர் மானங்காத்தான் பங்கயச் செங்கையென்ன**
**மேவலரெமரென்னுமல் வெங்களந்தன்னினின்ற**
**காவலன் கன்னன்கையும் பொழிந்தது கனகமாரி”**

என்ற பாட்டில் கொங்கர்கோன் என முதலடியில் வந்தமை காண்க. இன்ன பிறவற்றால் வில்லி புத்தூரார் இராமாயணம் முதலிய நூல்களைப் பின் பற்றிப் பாடினாரெனச் சொல்லுவார்கள். எவ்வாறாயினும் இவர் பாடிய பாரதமே ஏனையோரால் பாடப்பட்டவற்றினுஞ் சிறந்து தமிழ் மக்களிடையே நன்கு பரவியதாகும்.

இந்தப் பாரதக் கதையினை எங்கள் வீட்டுப் பாட்டிமாரும் அறிவார்கள், சொல்லுவார்கள். நாமும் கேட்டிருக்கிறோம். துஷ்யந்தனுக்குச் சகுந்தலையிடத்துப் பிறந்த புதல்வனின் பெயர் பரதன். அவன் இந்தியாவை அரசாண்டான். அந்தப் பரதனுக்குப் பிறகு இந்தியாவைப் "பாரதநாடு" என வழங்கி வருகிறோம். இந்தப் பாரதநாட்டில் மிகப் பெரிய யுத்தம் ஒன்று நடந்ததாம். அந்த வரலாற்றை வியாசமுனிவர் "மகாபாரதம்" என்ற பெயரோடு எழுதிவைத்தார். அதனை மொழி பெயர்த்துத் தமிழிலே செய்தவர் இந்த வில்லிபுத்தூரார்.

தற்காலத்திலே, சில அறிஞர்களும் இப்பாரதத்தினைக் கட்டுக்கதையெனச் சொல்லுகிறார்கள். ஆனால், இந்த மகாபாரத யுத்தத்தைப்பற்றிச் சங்கநூல்களிலுங் காண்கிறோம். உண்மையை உள்ளவாறே சொல்லிப் போவார்கள் சங்கப் புலவர்கள். இது எவருமறிந்தது. தமிழிலே எட்டுத்தொகையுள் ஒன்றாகிய புற நானூற்றிலே இரண்டாஞ் செய்யுளிலே "ஈரைம்பதின்மரும் பொருதுகளத்தொழிய, பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்" என்ற அடிகளிலே, பாரதப் போரினைக் காண்கிறோம். இந்தப் புறநானூற்றுக் கெழுத்தப்பட்ட உரையும் மிகமிகப் பழையதோர் உரை. அந்த இரண்டடிகளுக்குமுள்ள உரைப்பகுதியில் இன்னும் தெளிவாகக் காணலாம். அதாவது, "துரியோதனன் முதலாகிய நூற்றுவரும் பொருது போர்க்களத்தின்கட் படுந்துணையும் பெருஞ் சோறாகிய மிக்க உணவை இரு படைக்கும் வரையாது வழங்கினோய்" என்பதாகும். இன்னும் இந்தப் பாரதக் கதை கலித்தொகையிலும் சில விடங்களிற் காணப்படுகின்றது. வில்லிபாரதத்திலே, அந்தப் பழைய உண்மைக் கதையினை உள்ளுறுத்திச் சில புனையப்பட்டனவாகலாம். இப் பாரதத்திலே பல கிளைக் கதைகளுமுண்டு.

குரு என்ற ஓர் அரசனுடைய சந்ததியிலே திருதராட்டிரன், பாண்டு என்னுமிரு சகோதரர்கள் இருந்தார்கள். திருதராட்டிரனுக்குத் துரியோதனன் முதலாக நூறு புதல்வர்கள் உளர்; பாண்டுவுக்கு தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகிய ஐவர் உளர். இந்த ஐவரையும் பஞ்சபாண்டவர்கள் என அழைப்பர். இவர்கள் பாண்டு இறந்தபின் தாயான குந்திதேவியுடன் இந்திரப்பிரஸ்தம் என்ற நகரில் வாழ்ந்துவந்தனர். துரியோதனன் முதலியோர் அத்தினாபுரியிலிருந்து அரசியல் நடாத்தினர். அந்நாளில் பாண்டவர்கள் இராஜசூயம் என்ற பெரிய யாகத்தைச் செய்தார்கள். துரியோதனன் முதலியோர் இந்திரப்பிரஸ்தத்துக்குச் சென்று பாண்டவரின் சிறப்பைக் கண்டு பொறாமையுற்றனர். பாண்டவர்களும், துரியோதனன் முதலியோரும் இயல்பிலேயே ஒத்த மனமுடையவர்களல்லர். இவர்களுக்குள்ள மன வேற்றுமைதான் ஈற்றில் மகாபாரதப் போராக முடிந்தது.

துரியோதனனுக்குச் சகுனி யென்றொரு மாமன்; மிக்க வஞ்சக நெஞ்சுள்ளவன். இவன் ஏவலால், துரியோதனன் பாண்டவர்களைத் தனது அரண்மனைக் கழைத்துத் தருமருடன் சூதாடினான். நாடு நகர் யாவற்றையு மிழக்கச்செய்தான். காட்டிலே வசிக்குமாறு அனுப்பிவிட்டான். அல்லாமலும், பாண்டவர்களின் ஒரே பத்தினியாகிய திரௌபதியை அரச சபையில்வைத்து அவளது துகிலையுமுரிந்து மான பங்கஞ்செய்தான். பாண்டவர்கள் தமது வாக்கை நிறைவேற்றுமாறு பன்னிரண்டு வருடம் வனவாசம் செய்தும் ஒருவருடம் அஞ்ஞாதவாசம் செய்தும் திரும்பிவந்து துரியோதனனிடம், தமது நாட்டைத் தரும்படி கேட்டனர். அவன் தர மறுத்ததால் பாரதப்போர் மூண்டது. ஈற்றில் துரியோதனன் முதலியோர் மாண்டனர். பாண்டவர்கள் வெற்றி கொண்டார்கள். அவர்கள் வெற்றிக்கு கிருஷ்ண பரமாத்மா உதவிசெய்தார். இதுதான் பாரதக் கதையின் சுருக்கம்.

பாரதக்கதையோ, மிகமிக நீளமானது; கிளைக் கதைகளும் மிகமிகப் பல. இக்காரணத்தினாலேதான் ஒருவர் ஒரு பொருள்பற்றி மிக நீளமாகப் பேசினால், அல்லது மிக நீளமாக எழுதினால் "என்ன பாரதம் படிக்கிறீரோ?" அல்லது, "பாரதம் எழுதுகிறீரோ" எனக் கேட்பது வழக்கமாயிற்று. இந்த நீளமான பாரதக் கதையின் மிகச் சுருங்கிய சுருக்கம்தான் முன்னர்ச் சொல்லப்பட்டதாகும்.

இனி, எங்கள் வில்லிபுத்தூராரது பாரதம், காவியச் சுவைததும்பி உலகநீதியும், பண்டைய நாகரிகமும் பிறவும் தெரிக்குமொரு சிறந்த நூல். இந்நூலிலே, மிகச் சுவையான பகுதிகள் கிருஷ்ணன், தூதுச் சருக்கம், பதினேழாம், பதினெட்டாம் போர்ச் சருக்கங்கள். இவர் சந்தச் செய்யுள் பாடுதலில் மிகச் சிறந்தவர். போர்பற்றிய செய்யுட்கள் மிக ஓசையுடையனவாகக் காணப்படுகின்றன. இவருடைய சந்த

இன்பத்தைப் பின்வருஞ் சில செய்யுளில் காண்போம்.

கிருஷ்ணபிரான் துரியோதனனிடத்துப் பாண்டவர் தூதனுகச் செல்கிருன். கிருஷ்ணனுடைய தூதினை துரியோதனன் முதலியோர் விரும்பாது, அவரைக் கொல்ல முயற்சி செய்தார்கள்; வாய்க்கவில்லை. அப்பொழுது, கண்ணன் விசுவரூபங்கொண்டெழுந்தார். அதுகுறித்து, வில்லிபுத்தூரர் எழுச்சியோடு கூடிய நல்ல சந்தத்தில் தொடர்ந்து பல செய்யுள்கள் பாடினுர். அவற்றுள் வந்தவையே இவை :—

“ இறைவனெழிற்கதிர் மணிகளழுத்திய
தவிசினிருத்தலுமே
நெறு நெறெனக்கொடு நிலவறையிற்புக
நெடியவனப் பொழுதே
மறலியெனத்தகு நிருபனியற்றிய விரகை
மனத்துணரா
முறுகு சினத்துட னடியதலத்துற முடிக்கனத்
துறவே.”

இந்தச் செய்யுளில் கண்ணன் படுகுழியில் வீழ்த்தப் படும்போது, நிகழு (நெறு நெறன என்ற) மொழிக் குறிப்பும் பிறவுமமைந்து கிடத்தல் கண்டு இன்புறத்தக்கதாகும்.

பாரதத்துள் வருகின்ற முக்கியமான சில பாத்திரங்களின் இயல்புகளைக் கவனிப்போம்.

பஞ்சபாண்டவருள் தருமர் மிகவும் பொறுமையுடையவர். துரியோதனனேடு சூதாடி எல்லாவற்றையுந் தோற்று நின்ருர் தருமர். அந்த நேரத்தில் அவர்கள் முன்னிலையில், அவர்கள் பத்தினியான திரௌபதியின் துகிலை யுரிவித்தான் “ கற்றைக் குழல்பிடித்துக் கண்ணிலான் பெற்றெடுத்தோன், பற்றித் துகிலுரியப் பாண்டவரும் பார்த்திருந்தார். கொற்றத் தனித் திகிரிக் கோவிந்தா நீயன்றி, யற்றைக்கு மென்மானம் ஆர்வேறு காத்தாரே ?” என்று கண்ணனேயே தியானித்தாள். கண்ணன்தான் அன்றைக்குக் காத்தார். அப்பொழுது, வீமன் முதலியோர் தங்கள் தங்கள் ஆயுதங்களைப் பார்த்து வெகுண்டெழுதலும் தருமர் கையமைத்தார். தம்பிமார் என்செய்வர்! தமையனுன தருமரின் ஆணைக்கு அமைந்தார்கள். தன் மனையாளுக்கு நேர்ந்த மானபங்கத்தைப் பார்த்து நின்ற பொழுதும் பொறுமையினைக் கைவிடாத தருமர் 12 வருடம் வனவாசம் முடித்து 1 வருடம் அஞ்ஞாத வாசம் முடித்து நாடு, நகர் தருமாறு கேட்டார். அவன் மறுத்தான். இந்த நிலைமையிலுந் தருமர், “ குற்றம் பார்க்கில் சுற்றமில்லை ” “ ஒரு குலத்தில் பிறந்தார்களுடன் வாழும் வாழ்வினைப்போலுறுதியுண்டோ இருவருக்கும் வசையன்றே இரு நிலங் காரணமாக வெதிர்ப்பதென்றுன் ”.

கன்னன், வரையாது கொடுக்கும் வள்ளல். அவன் குந்திதேவி கன்னியாயிருக்கும்பொழுது, சூரியன் அருளால் பிறந்த பிள்ளை. ஆகவே, பாண்டவர் ஐவர்க்கும் முன்னேன். கன்னன் பாண்டவர் பக்கமாகவே யிருக்கவேண்டியவன். ஆனுல், அவன் துரியோதனன்பால் இளமைதொட்டுப் பயின்றுவந்தவன். அவர்கள் சோற்றை உண்டு வளர்ந்தவன். உண்டசோற்றுக்கு இரண்டகஞ்செய்யக் கூடாதல்லவா ?

பாண்டவர்க்கும் கன்னனின் பிறப்பு வரலாறு தெரியாது. ஏன்! கன்னனுக்கே தெரியாது. பெற்ற தாயான குந்திக்குமே தெரியாது. குந்தியும், கண்ணன் உணர்த்தவே உணர்ந்தாள். குந்தியும், கண்ணபிரான் கட்டளைப்படி கன்னனுக்கு அவன் பிறப் புணர்த்தினுள். குந்தியும் அன்று, கன்னனைப் பெற்றநாட் போலவே உணர்ச்சி பொங்கி அவனை அணைத்து உச்சிமோந்தாள். வளர்த்தெடுக்கப்பாக்கியம் பெருமைக்கு வருந்தினுள். பின்பு, கன்னனை, ஐவர்க்குந் தலைவனுயிருந்துஅரசாளுமாறுகேட்டாள். அப்பொழுது, கன்னன் சொன்னுன், “துரியோதனன் என்னை அவனுடைய ஆருயிர்த் துணையென நம்பி, எனக்கு முடிபுனைந்து, அரசபாரந் தந்து எல்லோரு மதிப்புச்செய்யவைத்தான்.” “ இது மட்டா! ஒரு நாள், துரியோதனன் மனைவியும், யானும் ஏகாந்தமான இடத்தில் விளையாட்டிடத்திலிருக்கும்பொழுது, அவள் மேகலையின் மணிகள் கீழேவிழுந்தன. துரியோதனன் எதிர்பாராவகை அவ்வழியே வந்தான். மணிகள் வீழ்ந்து கிடக்கக் கண்டான். என்னைச் சிறிதும் சந்தேகியாது, “ எடுக்கவோ! கோக்கவோ! என்ருன் ” என இவ்வாறு கன்னன், துரியோதனன் தன்னிடத்து வைத்திருக்கும் நம்பிக்கையையும், தலையன்பையும் எடுத்துச் சொல்லி, செஞ்சோற்றுக் கடன் கழிப்பதே தனது கடமை யெனவும், அதுவே புகழுந் தருமமும் ஆகுமென்று சொன்னுன் தாயார் குந்தி தேவிக்கு. கன்னன் தன் தாய்க்குச் சொல்லிய விடையமைந்த பாட்டுகள்தான் இவை :—

“ பெற்ற நீர் மகவன்பிலாமையோ அன்றிப்
பெரும்பழிகாரியோ விடுத்தீர்
அற்றை நாட்தொடங்கி என்னை இன்றளவும்
ஆருயிர்த் துணையெனக்கருதி
கொற்ற மாமகுடம் புனைந்து அரசளித்துக்
கூடஉண்டு உரிய தம்பியரும்
சுற்றமானவரும் என்னடிவணங்கத்
தோற்றமும் ஏற்றமுமளித்தான்.

மடந்தை பொற்றிரு மேகலைமணியுகவே
மாசறத்திகழு மேகாந்த
இடந்தனிற் புரிந்தே யானயர்ந்திருப்ப
எடுக்கவோ கோக்கவோ என்றான்
திடம்படுத்திடவேல் இராசராசனுக்குச்
செருமனைச்சென்று செஞ்சோற்றுக்
கடன் கழிப்பதுவே எனக்கினிப் புகழும்
கருமமுந் தருமமுமென்றான்.''

குந்தியும் வருந்தினாள்; பின் இவ்வரம் பெற்றுத்திரும்பினாள். மாயக்கள்வனான கிருஷ்ணனும் கன்னனைக் கொல்லுதற்குச் செய்த சூழ்ச்சிகள் எமக்கே வருத்தத்தைத் தருவனவாயினும் திறமை வாய்ந்தவை. அருச்சுனன் தந்தையாகிய இந்திரனை அனுப்பிக் கவசகுண்டலங்களைப் பெறச்செய்தான். அவன் செய்த புண்ணியமனைத்தையும் தான் பெற்றுக்கொண்டான்.

கன்னன் விஜயனின் அம்பேறுண்டு வருந்துகிறான். அப்பொழுது மாயக்கண்ணன், பிராமண வடிவம் தாங்கிச் சில கேட்கிறான். அந்த நிலைமையில், கன்னன் மகிழ்ந்து—

"ஆவியோ நிலையில் கலங்கியதியாக்கை
அகத்ததோ புறத்ததோ அறியேன்
பாவியேன் வேண்டும் பொருளெலா நயக்கும்
பக்குவந்தனில் வந்திலையால்
ஓவிலாதியான் செய்யும் புண்ணியமனைத்தும்
உதவினேன் கொள்க நீ உனக்கு
பூவில்வாழ் அயனும் நிகரல னென்றால்
புண்ணியமிதனினும் பெரிதோ.''

என்று தாரைவார்த்துத் தான் செய்த புண்ணியமனைத்தையும் உதவி உயிர்விட்டான்.

வில்லிபாரதத்துள் வடமொழிச் சொற்கள் பல காணப்படுகின்றன. மணிப்பிரவாள நடையினை யொத்துக் காணப்படுகிறது இவரது பாடல்கள். இவரது வருணனைகள் யாவும் கவி, மரபு, வழி வந்தவையேயாகும். இன்னும் திருக்குறள், இராமாயணம், சிலப்பதிகாரம் என்றின்னவற்றில் வந்த சில பகுதிகளில் ஒப்புமைகளும் காணப்படுகின்றன.

ஆனால், இவர் இந்த நீண்ட கதையினை அமைத்த திறமை ஒரு தனி. கிருஷ்ணன் தூதுச் சருக்கத்தில் சமாதானத்தையே தருமர் வற்புறுத்தினார். "குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை", "கண்மலரிற் கை படாதோ" என்றின்னவாய நடைமுறையில் வரும் மொழிகள் அமையத்தக்கதாகப் பாடிய தன்மையில் வில்லிபுத்தூரரின் உலகியலறிவும் அவர் புலமைச்சிறப்பும் நன்கு வெளியாகின்றன. இன்னும் தான் அக்கதையினை வழிமொழியாது, கதாபாத்திரங்களின் வாயினாலேயே ஆங்காங்கு கதையினை வெளிப்படச்செய்வது கண்டு ரசிக்கத்தக்கது. இவர் இன்னும் கதாபாத்திரங்களின், குணங்கள் இயல்புகளுக்குத்தக அரசர் தர்மம், உலகியல் வழக்கு முதலிய நீதிகளை வெளிப்படுத்தும் முறையும் ஒரு தனியேயாகும்.

---

# துறைமுகச் சரக்குகளை ஏற்றி இறக்குவதில் ஒரு சாதனை

இப்போது கொழும்புத் துறைமுகத்தில் தினசரி சராசரி 10,000 தொன் சரக்கு ஏற்றி இறக்கப்படுகிறது. நவம்பர் மாதம் 18 ஆம் திகதி 12,125 தொன் உணவுச் சாமான்களும், இதர சரக்குகளும் இறக்கப்பட்டன. இதுவே அதி உயர்ந்த சாதனை என துறைமுக அதிகாரிகள் கருதுகின்றனர்.

நவம்பர் 11 ஆம் திகதி 11,778 தொன்களும் 13 ஆம் திகதி 11,413 தொன்களும் இறக்கப்பட்டன

கப்பற்கமிட்டி 10,000 தொன் சரக்குகளை ஏற்றியிறக்குதலைச் சராசரிக் குறியளவாக வகுத்தது. தற்போது அந்த அளவினும் பார்க்க அதிகமாகவே சரக்குகள் ஏற்றியிறக்கப்படுகின்றன.

நவம்பர் மாதம் மழைகாலமாக இருந்தும் துறைமுகத்தில் வேலை சுமுகமாக நடைபெற்று வந்ததென துறைமுக (சரக்கு)க் கூட்டுத் தாபன அதிகாரிகள் அறிவிக்கின்றனர்.

துறைமுகத்துக்கு வெளியே காத்துநின்ற கப்பல்களின் எண்ணிக்கை மூன்றாகக் குறைந்துவிட்டது. நிலைமை மேலும் சீரடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. வெளியில் காத்துநிற்கும் மூன்று கப்பல்களில் ஒன்று மாத்திரமே உணவுச் சாமான்களைக் கொண்டுவந்துள்ளது.

கொழும்புத் துறைமுகத்தில் நெருக்கடியைக் குறைப்பதுபற்றி ஆராய்வதற்குப் பிரதமர் ஓர் உயர்தர மகாநாட்டைக் கூட்டினார். தேசிய மயமாக்கப்பட்ட சேவைகளின் அமைச்சர் திரு. சரத் விஜயசிங்கவும், வர்த்தக அமைச்சர் திரு. ஆர். ஜி. சேனநாயக்காவும் மகாநாட்டில் கலந்துகொண்டனர். இந்த அமைச்சுக்களின் அதிகாரிகளும், துறைமுக கூட்டுத் தாபனத்தின் அதிகாரிகளும் மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

# மணிமுடிப் பரிசு

அருள் செல்வநாயகம்

பங்குகொள்வோர் :

1. காசியப்பன்..........இலங்கை மன்னன்
2. தப்புள............ மானவன் தந்தை
3. மானவன்..........மன்னவன் மருகன்
4. சங்கா.............. மன்னன் மகள்

**ஒன்று**

**காசியப்பன் :** குழந்தாய் சங்கா !

**சங்கா :** அப்பா !

**காசிய :** முதுமையின் கோரப்பிடியிலே நான் அவதியுறுகிறேன். சாவின் சன்னிதானத்திலே வந்து நிற்கிறேன் ........

**சங்கா :** அப்படியெல்லாம் சொல்லாதீர்களப்பா.

**காசிய :** உண்மையை மறைக்க முடியுமா சங்கா. பிறந்தவன் இறந்துதானே யாகவேண்டும். இறவாத மனிதன் என்றுமே பிறந்ததில்லை பிறந்துவிடவுமில்லை. இயற்கையின் நியதி முதுமையிலே மரணப்படுக்கை என்றிருக்கும் போது ........

**சங்கா :** நீங்களென்ன தொண்டு கிழவன் ? முதுமை முதுமையென்று பேசுவதற்கு.

**காசி :** ஒருவன் கிழப்பருவத்திற்றுன் இறக்க வேண்டுமென்ற நியதி இல்லையே. பிறந்தவுடன் கூட இறந்துவிடுகிறுன். இந்த உலகவாழ்க்கையே ஓர் மாயை சங்கா !

**சங்கா :** அப்பா !

**காசி :** சங்கா ! தந்தையானவன் செய்யவேண்டிய கடமையை உதாசீனம் செய்துவிட்டு இப்பொழுது வருத்தப்படுக்கையில் வேதனை உறுகிறேன். ஈழநாட்டு மன்னவனுன இரண்டாம் காசியப்பனின் மகளாக நீ பிறந்திருந்தும் ........

**சங்கா :** அதனுல் பெருமைப்படுகிறேனப்பா.

**காசி :** நீ பெருமைப்படலாம். ஆனுல் நானன்றே துக்கப்படவேண்டியவனுக இருக்கிறேன்.

**சங்கா :** எதற்காக அப்பா !

**காசி :** எதற்காகவா ! காலம் உன்னை கன்னி என்ற கூட்டினுள் அடைத்துவிட்டது. அந்தக்கூட்டிலிருந்து விடுதலை பெறக் கணவனென்ற ஊன்று கோல் வேண்டுமம்மா ! இந்த ஊன்று கோலைத் தேடவேண்டியவன் யார் ! வருத்தப் படுக்கையிலே அவதியுறும் துர்ப்பாக்கியவானுகிய உன் தந்தைதான்.

**சங்கா :** அப்பா !

**காசி :** கணவன் என்ற காற்கட்டைத் தேடிவைக்காமல் போய்விடுவேனே என்றுதான் தடுமாறுகிறேன். கால நீரோட்டத்தின் சுழற்சியில் மனிதர்கள் ஒரு பொருட்டா இருந்தும் செய்ய வேண்டிய கடமை இருக்கிறதல்லவா ?

**சங்கா :** என் வாழ்க்கையைப் பற்றித்தானே ......

**காசி :** குறைவைத்துவிட்டான் தந்தையென்று சொல்லப்போகிறுயா. தந்தையின் கடமையைப் புறக்கணித்துவிட்டான் காசியப்பன் என்று சொல்லப்போகிறுயா !

**சங்கா :** அப்பா ! நான் நினைத்த் தொன்று, நீங்கள் சொல்வதொன்றப்பா !

**காசி :** கன்னிகழியாத உன் உள்ளத்திலே கணவனைப்பற்றிய இன்பமான கற்பனைகள் தானே துள்ளிவிளையாடும். பெண்ணுள்ளத்தை அறியாதவனு காசியப்பன். இலங்கை மன்னவனுகக் காசியப்பன் இருந்தாலும், புனிதமான அனுரதபுரம் காசியப்பனின் ஆட்சியைப் பெற்றிருந்தாலும், நாட்டு மக்கள் குதூகலமாகவாழ்ந்தாலும், பெற்றெடுத்த ஒரே ஒரு மகளை .........

**சங்கா :** மகளுக்கு எந்தக் குறையும் நீங்கள் வைக்கவில்லை யப்பா !

**காசி :** தந்தையின் வருத்தப் படுக்கையிலே, மகள் குறையையா சொல்வாள். நான்மட்டும் வருத்தப் படுக்கையில் இல்லாவிட்டால், உன் மனதைத் திறந்து சொல்வாயே ! காசியப்பன் நோயுடன் மரண வேதனை எதிர்த்துப் போராடுகிறுன். அந்தப் போராட்டத்தை நீ தடைப் படுத்தும்போது ........

**காசி :** அப்பா ! அதிகமாகப் பேசுகிறீர்கள்.

**காசி** : நானு ! இல்லே ! எழுந்து நடமாட முடியாத நிலையில் நான் இருந்தாலும் பேசக்கூடிய சக்தி உடையவனுகத்தானிருக்கிறேன் சங்கா ! மரணத்தை எதிர்த்துக்கொண்டிருந்தாலும் காசியப்பன் கோழையாகவில்லே.

**சங்கா** : அப்பா, வீணுக மனதைப் போட்டுக்குழப்புகிறீர்கள். எனக்குக் கணவனை ஏற்படுத்தாமல்.

**காசி** : போய் விடுவேனே என்றுதான் சந்தேகப்படுகிறேன். நான் நினைத்தால் உனக்குக் கணவனை ஏற்படுத்திவிடுவேன். ஆனுல் அவன் உனக்குப் பிடித்தவனுகவன்றோ இருக்க வேண்டும்.

**சங்கா** : எனக்குப் பிடித்தவன் .........

**காசி** : ஆம் குழந்தாய். கலியாணம் என்பது பல வந்தத்தின்பேரில் கட்டியெழுப்பப்படுவதல்ல ! இரு உள்ளங்கள் மனம் விரும்பிச் சேர்வதுதான், கலியாணம். மனம் விரும்பாத வனுடன் வாழலாமா ? வாழமுடியாதே.

**சங்கா** : அப்பா ! மனம் விரும்புபவனைத்தான் நான் மணக்கவேண்டுமென்கிறீர்களா ?

**காசி** : சங்கா ! நான் விரும்புபவனை யல்ல. நீ விரும்புபவனைத்தான் மணக்க வேண்டுமென்கிறேன். உன் விருப்பிலேதான், உன்சம்மதத்திலேதான், உன் மகிழ்ச்சியிலேதான் உன் திருமணம் பூரணமாக வேண்டும்.

**சங்கா** : அப்பா ! என் விருப்புத்தானே ........

**காசி** : ஆம் குழந்தாய் நீயாரையும் விரும்பி இருக்கிருயா ?

**சங்கா** : ஆமப்பா !

**காசி** : உன் கணவனைத் தேர்ந்தெடுத்துவிட்டாயா ? சந்தோஷகரமான இச்செய்தியை என் முன்னுடிச் சொல்லவில்லே.

**சங்கா** : என் இஷ்டத்தைச் சொல்ல நீங்கள் பேச விட்டாற்றுனே.

**காசி** : இப்பொழுது பேசு சங்கா ! சந்தோஷமாகப் பேசு சங்கா ! நாளே இலங்கைக்கு மன்னவனுக வர ஆற்றலுள்ளவனுகத்தானே உன் காதலன் இருப்பான். யார் உன் சிந்தையைக் கவர்ந்தவன்.

**சங்கா** : அவர் ................

**காசி** : சொல்லு சங்கா. பெற்றெடுத்தவனிடம் சொல்லவா லட்சைப்படுகிருய். உன் நலந்தான் என் நலமும். என் இந்த ஈழநாட்டு நலமுங் கூட. யாரம்மா உன் காதலன் ?

**சங்கா** : அவர்தான் .........

**காசி** : இன்னுமா வெட்கப்படுகிருய். இந்தக்கணமே திருமணத்தை நடத்தி என் மரணப் போராட்டத்தினுக்கு ஓர் முடிபுகண்டுவிடுகிறேன். சொல் குழந்தாய்.

**சங்கா** : அப்பா ! அவர்தான் மானவர்.

**காசி** : என்ன ? மானவனு !

**சங்கா** : ஆம் அப்பா மானவர் தான்.

**காசி** : வரவேற்கக்கூடிய சுபசெய்திதான். என்மகள் சங்காவினுக்கு ஏற்றவன்தான். மானவன்தான். உன் காதலன் என்று சொல்வதற்கா இத்தனே வெட்கப்பட்டாய்.

**சங்கா** : அப்பா !

**காசி** : சங்கா ! உன்மனம் போலவே மாங்கலியமுமாகட்டும். உன் நலமொன்றுதானம்மா எனக்கு லட்சியமேயொழிய வேறென்றுமல்ல. இப்பொழுதே திருமணத்தினுக்கு ஏற்பாடு செய்கிறேன்.

**சங்கா** : அப்பா ! இத்தனே அவசரம் .........

**காசி** : காதல் பூரணமாக வேண்டாமா ! நான் சாவதற்கிடையில் உனது திருமணச் சிறப்பைக் காண வேண்டாமா ! யாரங்கே ?

**சங்கா** : சேவகன் வந்திருக்கிருனப்பா.

**காசி** : அமைச்சரை அழைத்துவரச் சொல்லம்மா !

(தப்புள வரல்)

**தப்புள** : மகாராஜா வணக்கம்.

**காசி** : நீரும் தயாராகத்தான் வந்திருக்கிறீர் போலும்.

**தப்புள** : மன்னவா ! தங்களேக் காணவென்றுவந்தேன். தேவியாருடன் உரையாடிக்கொண்டிருந்த மையினுல் வாசலிலே நின்றுகொண்டிருந்தேன்.

**காசி** : நல்லது. அமருங்கள் அமைச்சரே.

**தப்புள** : மகாராஜா !

**காசி** : அமைச்சரே மங்கள கரமான சுபசெய்தி.

**தப்புள** : சொல்லுங்கள் மகாராஜா !

**காசி** : எனது மகள், உமது மகன் மானவனே விரும்புகிறுள். ஆகவே மானவனுக்கு என் மகளேக் கொடுத்துவிடலாமென்று எண்ணுகிறேன். உமக்குச் சம்மதந்தானே.

**தப்புள** : கரும்பு தின்ன யாராவது கூலி கேட்பார்களா மகாராஜா ! எனக்குப் பூரண சம்மதம்.

**காசி** : நல்லது அமைச்சரே ! இன்றே திருமணத்தினுக்கு வேண்டிய ஏற்பாடுகளேச் செய்யும்.

**தப்புள** : உத்தரவு மகாராஜா !

## இரண்டு

**மானவ** : அன்பே ! நம்காதல் இத்தனே கோலமாகப் பூரணமாகுமென்று .........

**சங்கா** : நீங்கள் எதிர்பார்க்க வில்லே யென்றுதானே சொல்லப்போகிறீர்கள்.

**மானவ :** ஆமாம். அமைச்சன் மகனுக நான் இருந்தாலும், ஓர் அமைச்சனுக்குரிய பண்பாடு இல்லை யென்று துக்கப்படுகிறேன்.

**சங்கா :** நாள்க்கணக்காக இயற்கையிலே மூழ்கியிருக்கும் உங்களுக்கு எப்படிப் பண்பாடுவரும்.

**மானவ :** இயற்கையை ரசிப்பது தவறு என்கிருயா ?

**சங்கா :** தவறு என்று நான் சொல்லவில்லை. இயற்கையில் ஈடுபடாதவர்கள் மனிதர்களல்ல. ஆனல் நீங்கள் அளவுக்கு மீறி ஈடுபடுகிறீர்கள்.

**மானவ :** அது என் வழக்கமாகிவிட்டதே சங்கா ! நான் ஏன் கவிஞனுகப் பிறக்கவில்லையென்று வருந்துகிறேன்.

**சங்கா :** கவிஞனுக்குப் பிறப்பவன் தானு கவிஞனுவது. நீங்களும் ஒரு கவிஞர்தானே.

**மானவ :** நீதான் என்னைக் கவிஞனென்று சொல்கிருய். கவியென்ருல் என்னவென்று தெரியாத நானு கவிஞன்.

**சங்கா :** என்னை ஏமாற்றமுடியாது. இயற்கையை வருணித்து நீங்கள் எழுதிய கவிதைகளையெல்லாம் நான்படித்தேன். சுவைத்தேன்.

**மானவ :** பூரணமாகாத அவைகளை நீ பார்த்துவிட்டாயா ? இவன் ஏதோ உழறிக் கொட்டியிருக்கிருனென்று படித்தவுடன் நினைத்திருப்பாயல்லவா ?

**சங்கா :** உங்களைப் பற்றிக் கேவலமாக நீங்கள் ஏன் மதிப்பிடுகிறீர்கள். உங்கள் கவிதைகள் கொடைகள். சிரஞ்சீவியானவைகள்.

**மானவ :** அதிகமாகப் புகழ்கிருய்.

**சங்கா:** அப்படி யென்றுதான் வைத்துக்கொள்ளுங்களேன். முதலிரவிலே நமக்கு ஏன் இந்தப் போட்டி ?

**மானவ :** போட்டிதானே கண்ணே வாழ்க்கை. வாழ்க்கை என்னும் வண்டிக்கு நாமிருவரும் போட்டிபோட்டுக் கொண்டிழுக்கும் மாடுகள்.

**சங்கா :** ஆமாம். நமக்குள் போட்டி ஒன்றுதான் குறைவு.

**மானவ :** போட்டி வேண்டாமென்ருல் விட்டுவிடுவோம்.

**சங்கா :** விட்டுவிட யாரும் தயாராக இல்லை. ஆனல்..

**மானவ :** சொல்லு சங்கா. . . . . .

**சங்கா :** இனிமேல் நீங்கள் கவிதை எழுதுவதை நிறுத்தியாக வேண்டும்.

**மானவ :** எதற்காக ?

**சங்கா :** எதற்காகவா. நான் இந்நாட்டு இளவரசி, நீங்கள் இந்நாட்டினுக்கு வருங்கால மன்னவன். மன்னவராகப்போகும் நீங்கள் எடு பிடித்துக்கொண்டிருக்க முடியாது. கூர்மையான வாள் பிடிக்க வேண்டும்.

**மானவ :** நான் வருங்கால மன்னவன். அதற்காக வாள்பிடிக்கவேண்டும். வேறு ஏதாவது.

**சங்கா :** இருக்கிறது. புறமுதுகிடாமல் போராடவேண்டும். போர்க்களத்திலே வெற்றிவீரனுக நின்று போர்புரியவேண்டும்.

**மானவ :** நானு ! எடுபிடிக்கும் கை வாள் பிடிக்கவா ! இது முடியாது தேவி.

**சங்கா :** நீங்கள் முடியாதென்ருல் உரிமை விட்டுவிடுமா ? இலங்கை மன்னவன் காசியப்பனின் மருகனுக என்று ஆகினீர்களோ அன்றே இந்நாட்டின் வருங்கால மன்னவராகிவிட்டீர்கள்.

**மானவ :** என்ன ! விலங்கு பூட்டப்பட்டாயிற்று ? இந்த விலங்கை நான் எதிர்பார்க்கவில்லை. . . .

**சங்கா :** காசியப்ப மன்னவனின் ஒரே பேருன மகளைக் காதலிக்கும் போதே தெரிந்திருப்பீர்கள்.

**மானவ :** இந்நாட்டு மன்னவனுக வேண்டுமென்பதற்காகத் தான் உன்னைக் காதலித்தேன் என்கிருயா ? காதலுக்காக நீ கொடுக்கும் விமர்சனம் தவருனது. இயற்கையின் தாசன் மானவனே யொழிய, இயற்கையை அழிப்பவனல்ல மானவன்.

**சங்கா :** நீங்கள் தவருக எடுக்கிறீர்கள்.

**மானவ :** இல்லை. நான் எதையும் தவருகச்சொல்லவில்லை. எடுக்கவுமில்லை. மணிமகுட உரிமை உனக்காகத்தானே எனக்குவந்துசேருகிறது.

**சங்கா :** ஆமாம்.

**மானவ :** அந்த உரிமை எனக்கு வந்தாலென்ன உனக்கு வந்தாலென்ன இலங்கை வரலாற்றிலே எத்தனையோ பெண்கள் அரசியாகி இருக்கிருர்கள். அப்படியிருக்க என் சங்கா அரசியாவது தகாத காரியமோ !

**சங்கா :** நானு அரசி ! என்னல் இந்தச் சுமையை ஓர் போதும் தாங்கமுடியாது.

**மானவ :** உன்னல் தாங்கமுடியாததை என்னல் எப்படித் தாங்கமுடியும்.

**சங்கா :** நீங்கள் ஆண் மகனுக இருப்பது.

**மானவ :** சபாஷ் ! நன்ருகச் சொல்லுகிருய். அதோ உன் தந்தை அழைக்கும் குரல் கேட்கிறது. வா போகலாம்.

**சங்கா :** அப்பா !

**காசி :** சங்கா !

**சங்கா !** அப்பா ! இதென்னப்பா இது..........

**காசி :** சாவதற்கு முன்னர் காணும் கடைசிக்காட்சி யம்மா ! அதோ .... யமதூதன் .... பாசக் கயிற்றை வீசிவிட்டான். இனித் தப்பமுடியாது. முடியவே முடியாது. சங்கா ! சங்கா ........

**சங்கா :** அப்பா ! அப்பா ! போய்விட்டீர்களா ! என் னைத் தனியேவிட்டுப் போய்விட்டீர்களா அப்பா ! அப்பா !

**மானவ :** இரண்டாம் காசியப்பனின் ஆட்சியை இன்றுடன் இலங்கை இழந்துவிட்டது. ஈடுசெய்ய முடியாததோர் நட்டமாகும்.

## மூன்று

**சங்கா :** தந்தை இறந்த அதே கணந்தொட்டு நீங் கள் அரசராகிவிட்டீர்கள்.

**தப்புள :** அரசராகிவிட்டது மட்டுமல்ல ! இலங்கை அரசனென்று பிரகடனப்படுத்தப்பட்டாயிற்று. மன்னர் மறைந்து சரியாக ஒரு திங்கள் பூர்த்தி யாகிவிட்டது. இனி முடிசூட்டு விழாவை நடத்த வேண்டும்.

**மானவ :** அப்பா !

**தப்புள :** மானவா ! முடிசூட்டுவிழாவினுக்கு வேண்டிய ஏற்பாடுகளை மேற்கொள்ளட்டுமா.

**சங்கா :** மேற் கொள்ளுவதென்ன மாமா. முடி சூட்டு விழாவை நடத்தியாக வேண்டும்.

**மானவ :** சங்கா ! என் மனப்பாங்கை அறியாமற் பேசுகிருய். நானாவது ? இலங்கைக்கு மன் னவனாவது.

**தப்புள :** மானவா ! நீதான் பேசுகிருயா ?

**மானவ :** நான்தானப்பா பேசுகிறேன். உங்கள் மகனே தான் பேசுகிறேன்.

**தப்புள :** உனது மனக்கருத்து........

**மானவ :** தெளிவாகப்பட வில்லை யென்கிறீர்களா ?

**தப்புள :** தெளிவு வேண்டியதில்லை. பொறுப் புணர்ச்சியை உணராமல் பேசுகிருயேயென்று துக்கப்படுகிறேன்.

**மானவ :** அப்பா ! இந்த மணிமகுட உரிமை எனக்கு எக்காலத்திலும் வேண்டாம்.

**தப்புள :** சிறு பிள்ளைத்தனமாகச் சொன்னதைத் திரும்பத் திரும்ப எதற்காகச் சொல்லுகிருய்.

**மானவ :** அப்பா ! திரும்பத் திரும்பச் சொல்ல வில்லை. ஒரே வார்த்தையிலே மகுடம் வேண் டாம் என்கிறேன்.

**தப்புள :** நினைக்கமுடியாதது. நடக்கவும் முடியா தது. யாராவது இலங்கை மணிமகுடத்தை வேண்டாமென்பார்களா ? பைத்தியக்காரன்கூட வேண்டாமென்று சொல்லமாட்டான்.

**மானவ :** இருக்கலாம். ஆனல் எனக்கு வேண்டாம். மன்னவனுக்குப் பிறகு மகன். மகன் இல்லா விடில் மகள். ஆகவே சங்காவே அரசியாகட்டும்.

**சங்கா :** உங்களுக்கு வேண்டாத பதவி எனக் கெதற்காக.

**மானவ :** சங்கா ! மன்னவன் மகளாகப் பிறந்து விட்டமைக்காகப் பதவியை ஏற்றுத்தானக வேண்டும்.

**சங்கா :** மன்னவன் மகளாக இருந்தாலும் எனக்கு அரச போகம் வேண்டாம். எனது அரச போகத்தை உங்களுக்கே ஈந்துவிடுகிறேன்.

**மானவ :** வேண்டாமென்பவனுக்கா அரச உரிமை யைக் கொடுக்கிருய் ! இது நல்ல வேடிக்கையே தான்.

**தப்புள :** நீங்கள் இருவரும் வேடிக்கையான மனி தர்களாகவே இருக்கிறீர்கள். உங்களது விசித் திரமான போக்கைப் பார்த்தால் ........

**மானவ :** என்ன சொல்லத் தோன்றுகிறதப்பா ?

**தப்புள :** சொல்வதா ! .... சொல்வதற்கு இனி வார்த்தைகளே இல்லை. உரிமையான இருவர் களும் வேண்டாமென்ருல் இனி உரிமைக்காக எங்கு செல்வது ?

**மானவ :** எங்குமே செல்ல வேண்டியதில்லை.

**சங்கா :** என்ன !

**மானவ :** சங்கா ! நீயோ அரசியாக மாட்டேனென் கிருய். நானே அரசனுக மாட்டேன் என் கிறேன். இருந்தும் நம்முன்னே இலங்கை மணி மகுடம் இருக்கிறது. நாம் வேண்டாமென்ரு லும் மணிமகுடத்துக்காக ஒருவர் வேண்டப் படுகிருர்.

**சங்கா :** ஆமாம் நாட்டினுக்கு எப்படியும் மன்ன வன் ஒருவன் இருந்தாக வேண்டும். மன்ன வன் என்பதைக் காட்ட மணிமகுடத்தைத் தாங்கியாகவேண்டும்.

(20 ம் பக்கம் பார்க்க)



முதலியார் சிற். கைலாசபிள்ளை.

# முதலியார் சிற். கைலாசபிள்ளை அவர்கள்

**அம்பலவாணன்**

ஈழநாட்டிலே புலவர்களாகத் திகழ்ந்தவர்கள் பல தொழில் துறைகளில் ஈடுபட்டிருந்தனர். எனினும், அரசாங்க உத்தியோகத்திலிருந்து சிறந்த புலவர்களாக விளங்கியவர்களை விரல் விட்டெண்ணி விடலாம். அவர்களுள் பிற்காலத்திலே சிறந்த புலவராக விளங்கியவர் சிற். கைலாசபிள்ளை அவர்கள். இவர் இராசவாசல் முதலியாராகவும், இலங்கைத் தேசாதிபதியின் தமிழ் முதலியாராகவும், அக்காலத்தில் இராசமாலிகித நிலையம் என்றழைக்கப்பட்ட அரசாங்கக் கந்தோரில் தமிழ் மொழிபெயர்ப்பாளராகவும் கடமையாற்றினார். இவர் பரம்பரையே பண்டித பரம்பரை. இவர் தாயார் வித்துவ சிரோமணி இருபாலைச் சேனாதிராய முதலியாரின் பிரதம மாணவரும், ஆறுமுகநாவலருக்கு இலக்கண இலக்கியம் படிப்பித்தவருமாகிய சரவணமுத்து முதலியாரின் மகள் மாணிக்கவல்லி என்பவர். இவர் பிறந்தது நல்லூரில். சிற். கைலாசபிள்ளையவர்கள் இளமையில் தமது உறவினராகிய நல்லூர் சம்பந்தப்

புலவரிடம் சிறிது தமிழ் கற்ருர். பின்னர் சுண்டிக்குளியிலுள்ள சென்ற். ஜோன்ஸ் கல்லூரியில் ஆங்கிலம் கற்றுத் தேறினர். படிக்கும் காலத்தில் சிறந்த மாணவனுக இருந்ததுடன் சிறந்த பேச்சாளராகவும் விளங்கினுர். அக்காலத்திலே நடைபெற்ற கிளறிக்கல் பரீட்சையிலே தேறி கொழும்பு பொதுவேலைப் பகுதித் தலைமைக் காரியாலயத்தில் உத்தியோகம் பார்த்து வந்தார். உத்தியோகத்தில் அமர்ந்த பின் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் சமஸ்கிருதத்தையும் தாமாகவே படித்து வந்தார். சில காலம் உத்தியோகம் பார்த்த பின் உடல் நலக்குறைவு ஏற்பட்டதால், கைலாசபிள்ளை அவர்கள் அந்த உத்தியோகத்தைக் கைவிட்டு தென்னிந்தியாவிலே ஸ்தல யாத்திரைசெய்து வந்தார். அக்காலத்திலே சென்னையில் சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் தண்டமிழ் வளர்ச்சியில் ஈடுபட்டு வந்தார்கள். கைலாசபிள்ளையவர்கள் சென்னைக்குச் சென்று தாமோதரம்பிள்ளையவர்களைச் சந்தித்தார்கள். பிள்ளையவர்கள் கைாலசபிள்ளையவர்களின் ஆழ்ந்த கல்வியறிவையும் ஆராய்ச்சி வன்மையையும் கண்டு, தமது பழந்தமிழ் நூற் பரிசோதனைக்குச் சில காலம் துணைவராக ஆக்கிக்கொண்டார்கள். அவ்வாறு சென்னையில் தங்கியிருக்கும் காலத்தில் சென்னைக்கு அண்மையில் உள்ள வடதிருமுல்லைவாயில் எனும் தலத்துக்குச் சென்று சுவாமி தரிசனஞ் செய்து வருவது இவருடைய வழக்கம். இந்நாட்களிற்ருன் இவரும் இவருடைய நண்பர் இருவருமாகக் கூடி வடதிருமுல்லைவாயில் மும்மணிக்கோவையைப் பாடினர். அகவல் பாடியது கைலாசபிள்ளை. வெண்பாப் பாடியது சி. வை. தாமோதரம்பிள்ளையவர்களின் மகன் அமிர்தலிங்கம்பிள்ளை. இவருடைய அகவல்களை அக்காலத்து வித்துவான்கள் பலர் பாராட்டியுள்ளனர். அக்காலத்தில் சென்னையிலிருந்த புலவர் பலரின் நட்பும் இவருக்கேற்பட்டது. இவருடைய அகவல்கள் கல்லாடச் செய்யுட்கள் போல இறுக்கமும் பொருளாழமும் உள்ளன. மகாமகோபாத்தியாயர் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள்—திரு. கைலாசபிள்ளை அவர்களை ஒருமுறை திருவாவடுதுறை ஆதீனத்துக்கு அழைத்துச் சென்று அக்காலச் சந்தான குரவராகிய சுப்பிரமணியதேசிகரை அடையும்படி செய்தனர். தேசிகர் இவருடைய மும்மணிக்கோவை அகவல் ஒன்றை இவர் படிக்கக் கேட்டு அதனை இரண்டாம் முறையும் படிக்கும்படி கட்டளையிட்டு இவரை "வித்துவான்" எனப் புகழ்ந்து பட்டுப் பீதாம்பரங்கள் பரிசாக வழங்கினுர். திருவாவடுதுறை ஆதினத்திலும் இவர் தேசிகருக்கு அணுக்கராய்ச் சில காலம் வசித்தனர். ஆதீன சம்பிரதாயங்களையும் இவர் நன்ருக அறிந்தவர். தேசிகரிடம் இவர் சிவஞானபோத மாபாடியத்துட் சில பாகங்களுக்குப் பாடங் கேட்டு எழுதி வைத்திருந்தார். இதனுல் சித்தாந்த சாத்திரங்களிலும் பண்டார சாஸ்திரங்களிலும் மிக்க பயிற்சியுடையவரானுர். இவ்வாறு தாம் பெற்ற கல்வியறிவைக்கொண்டுதான் கைலாசபிள்ளையவர்கள் பிற்காலத்திலே கொழும்பு விவேகானந்த சபையிலே அங்கத்தவர் பலருக்குச் சித்தாந்த சாத்திரங்களைப் பலவருடம் படிப்பித்துவந்தார்.

இவ்வாறு மூன்று வருடம் வரை இந்தியாவில் இருந்துவிட்டு மீண்டு இலங்கைக்கு வந்து அரசாங்கத்திலே உயர்தர நீதிமன்றத் துவிபாஷகராகப் பல காலம் சேவை செய்தார். அதன்பின்பு யாழ்ப்பாணம், மட்டக்களப்பு முதலிய இடங்களில் கச்சேரி முதலியாராகவிருந்து கடைசியாக தேசாதிபதியவர்களுக்குத் தமிழ் முதலியாராகவும் இருந்தனர். கொழும்பில் வசித்த காலத்தில் சேர் பொன். இராமநாதன் அவர்கள், இவரிடம் தாயுமானசுவாமி பாடல் முதலிய சில நூல்களைக் கற்றனர். சேர். பொன். அருணுசலம் அவர்கள் இவருக்கு மிக்க நண்பராய் இவரைத் தமது உசாத்துணைவராகக் கொண்டு சில தமிழ் நூல்களைக் கற்றனர். அக்காலத்திலே அரசாங்கம் நடத்திய தமிழ்ப் பரீட்சைகளுக்கு சேர். பொன்னம்பலம் அருணுசலம் அவர்களும் சிற். கைலாசபிள்ளையவர்களும் செல்வது வழக்கம். இவருக்குப் பழைய அகவல்கள் என்ருற் போதும். நன்கு பாராட்டிப் படித்து மகிழ்வார். இவர் அகவல் படிக்கும் முறையும் அதற்குரிய இசையும் கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய் உள்ளன. இவர்போல உரிய இசைப்படி அகவல் படிப்போரும், பாடுவோரும் இவர் காலத்தில் இருக்கவில்லை. திருமுருகாற்றுப் படையை இவர் படிக்கும் பொழுது அதனைக் கேட்டுக் கொண்டிருப்பதே ஒரு தனி இன்பம் பயப்பதாகவிருக்கும் என்று விபுலானந்த அடிகள் என்னிடம் பல முறை சொல்லியிருக்கிருர்கள். இவர் சமஸ்கிருத சுலோகங்களை அவற்றிற்கேற்ற உச்சரிப்புடன் படிப்பதைக் கேட்டு பிராமணக் குருமாரும், பௌத்த குருமாரும் வியப்புற்றனர் என்று வித்தகப் பத்திராதிபர் தென்கோவை பண்டிதர் கந்தையாபிள்ளையவர்கள் என்னிடம் கூறினுர்கள். அன்றியும் கைலாசபிள்ளை முதலியார் அவர்களைப் பற்றி அநேக விஷயங்களையும் எடுத்துக் கூறினுர்கள். கைலாசபிள்ளையவர்களைப் பற்றி பண்டிதர் கந்தையாபிள்ளையவர்கள் நாட்கணக்காகப் பல குறிப்புக்களைச் சொல்லுவதற்கேற்ற விஷயங்களை அறிந்திருக்கிருர். முதலியார் சிற். கைலாசபிள்ளையவர்களின் வரலாறு இதுவரை விரிவாக எழுதப்படவில்லை.

சிற். கைலாசபிள்ளையவர்கள் நல்ல சங்கீத ஞானமும் உடையவர். தேவாரம் முதலியவற்றை யாழிசையோடும் பத்தியோடும் பாராயணம் செய்பவர். சிவசின்னங்களைத் தரித்தலிலும் சைவ ஆசாரத்திலும், சிவபக்தியிலும் சிறந்தவர். இவர் பலருடனும் கண்டபடி வீண்வார்த்தைபேசி நேரத்தை வீணே கழிப்பதில் வெறுப்புடையவர். இதனுல் வீண் வார்த்தை பேசுவோரைக் கண்டால் மௌனஞ் சாதிப்பார். மற்றும்படி சமய விஷயமாகவோ கல்வி விஷயமாகவோ பலருடனும் கலந்து உரையாடுவார். இலங்கையிலுள்ள தேசாதிபதிமார், உயர்தர நீதி மன்றத்தவர்கள் முதலியோர் இவரை நன்கு மதித்தனர். பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் தேசீய கீதம் அதாவது "God Save The King" என்ற கீதத்தைப் பாடுவது வழக்கம். ஆனுல் ஆங்கிலம் தெரியாதவர்கள் இந்த அரச வாழ்த்தை எப்படிப் படிக்க முடியும். சிற். கைலாசபிள்ளையவர்கள் அதற்கு ஒரு வழி கண்டு பிடித்தார். இந்த அரச வாழ்த்தையே ஆங்கிலத்திலிருந்து ஆங்கில சுரமும் சங்கீத சுரமும் வழுவாதபடி மொழிபெயர்த்தார். "காவல் மன்னரைக் கடவுள் காக்கவே" என்ற பாட்டைத்தான் பல காலமாகத் தமிழ்ப்பாடசாலை மாணவர்களும் பிறரும் பாடிவந்தார்கள்.

கைலாசபிள்ளையவர்கள் அரசினர் கட்டளைச் சட்டங்களை மொழிபெயர்த் திருக்கின்றுர்கள். இக்காலத் தமிழ் மொழிபெயர்ப்பாளர் இவருடைய மொழி பெயர்ப்புக்களை வழிகாட்டியாகக் கொள்வது மிக நன்று. இவர் மொழிபெயர்த்த நொத்தாரிஸ்மார் சட்டம், முத்திரைச் சட்டம், கலியாணப் பதிவுச் சட்டம் முதலிய சட்டங்களைத் தமிழறிஞர்கள் பெரிதும் பாராட்டினுர்கள். அவர்கள் கையாண்ட சொற்கள் பல இப்பொழுது சட்ட மொழிபெயர்ப்பாளர்களால் பயன்படுத்தப்படுகின்றன. ஆனுல் அவற்றை முதன் முதலில் ஆக்கித் தந்தவர் கைலாசபிள்ளை முதலியார் என்பதை இக்கால இளம் மொழி பெயர்ப்பாளர்கள் அறியமாட்டார்கள்.

இத்தகைய சிறந்த தொண்டாற்றிய கைலாச பிள்ளையவர்களுக்கு அரசாங்கம் இராசவாசல் முதலியார் பட்டத்தையளித்தது ஒரு பெரிய வியப்பன்று. கொழும்பில் இவருக்கு உபசரணைக் கூட்டம் நடைபெற்றது. பலர் இவருடைய பெருமையைப் பாராட்டிப் பேசினர்.

இவர் மிக்க சாந்தமும் பொறுமையும் உடையவர். ஆடம்பரமான வாழ்க்கை இல்லாதவர். கொழும்பு விவேகானந்த சபைக்கு இவர் செய்த தொண்டுகட்காக இவருடைய படம் அந்தச் சபை மண்டபத்தை முன்ஞெருபோது அலங்கரித்தது. பிள்ளையவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்திலும் ஓர் அங்கத்தவராக விருந்தார். "போற்றுகம்வம்மே" எனப் புலவரை உளப்படுத்தி இவர் பாடிய தனிச் செய்யுள் ஒன்று "செந்தமிழ்ப் பத்திரிகையின் முதலாம் தொகுதியில் வெள்ளியந்திருமலை கிழார் என்னும் பெயரோடு வெளிவந்துள்ளது ;

போற்றுகம் வம்மே ! போற்றுகம் வம்மே !
மாற்றருஞ் சிறப்பின் வண்டமிழ்ப் புலமைப்
பாவல்லீரும் நாவல்லீரும்
போற்றுகம் வம்மே ! போற்றுகம் வம்மே !
வடாஅது நெடியோன் வண்புகழ் மலையே
தெனுஅது குமரியந் தெண்டிரைப் பௌவமே
குணுஅது மலையக் குண்டுநீர் பரப்பே
என்றெென் றமைந்த தென்றமிழ் வாழ்க்கைப்
பாவல்லீரும் நாவல்லீரும்
போற்றுகம் வம்மே ! போற்றுகம் வம்மே !
தென்றமிழ் நிலத்தினர் அன்றுதாம் பலகாற்
பிரிந்துறை கொள்கைய ராகித் தெரிந்த
யாழின் வந்த வாழ்வுடைப் பெயரிற்
ருழ்வின் ருேங்கிய தண்டமிழ் நிலத்திலும்
முத்தமிழ் விரகன் முதிரிசைப் பனுவல்
"நிரைகழலரவ" நிறை மொழி பெறீஇக்
கோணுதோங்கிய கோணமா மலையினும்
திரைகட லோடிய திருவமர் சிறப்பிற்
சிங்கா வண்டுறைச் சிங்க புரத்தினும்
தூங்கா விளையட்டகைசால் கழனியந்
தூங்கு குலைத்தெங்கு தேங்குபல படப்பையும்
பொறிகாண் அலவஞெடு மீனமுங் குறையாச்
செறிமாண் கழிசூழ் புளியந் துருத்தி
மட்டுக்களப்பினும் புலவர் புகழ் நிறீஇய
அரும்பொருட் பொன்பெயர் அமர் நாட்டங் கணும்
இட்ட வாழ்க்கை கட்டிய பான்மைப்
பாவல்லீரும் நாவல்லீரும்
போற்றுகம் வம்மே ! போற்றுகம் வம்மே !
.................................
ஆதலின் யாமெலாங் காதலிற் குழுமிப்
போற்றுகம் வம்மே ? போற்றுகம் வம்மே ?
மாற்றருஞ் சிறப்பின் வண்டமிழ்ப் புலமைப்
பாவல்லீரும் நாவல்லீரும்
போற்றுகம் வம்மே ! போற்றுகம் வம்மே !

(26 ம் பக்கம் பார்க்க)

# வனபரிபாலன ஆராய்ச்சி

திரு. பீ. டபிள்யூ. இரத்தினம்

மரங்கள் நெருக்கமாய் இருக்கும் காடுகளில் சூரிய வெப்பம் குறைவாகவும் மழை அதிக மாகவும் இருக்கும். மழையினால் ஏற்படும் பெருவெள்ளங்களும் இருபாகங்களிலிரா. இலங் கையில் பல பாகங்களில் காடு வெட்டினதின் காரணமாக மழைவீழ்ச்சி குறைந்து வருவது காணத்தக்கதாயிருக்கிறது. தற்காலத்தின் விவ சாயத் தளர்ச்சிக்கு இது ஒரு காரணம்.

மரம் ஆதிகாலந் தொட்டு பெரிய கப்பல்கள் செய்யவும், வீடுகள் கட்டவும், வீட்டின் பல தளவாடங்கள் செய்யவும், விவசாயத்திற் கேது வான ஆயுதங்கள் செய்யவும், புகையிரதப் பாதைகளும் பாலங்களும் கட்டவும் அதிகமதிக மாக உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. விஞ் ஞான அறிவு வளரவளர மரத்திலிருந்து பட்டுத் துணியையும், காகிதத்தையும் இன்னும் அநேக பொருள்களையும் செய்யும் முறைகள் மனிதனால் கண்டுபிடிக்கப்படுகின்றன.

இற்றைக்குச் சில வருஷங்களுக்கு முன் காட்டு இலாகா ஆராய்ச்சியாளர் இலங்கையில் காடுகளைத் திருத்த வழிகளைத் தேடினர். பர்மா விலிருந்து தேக்கம் விதைகளை வருவித்து இங்கு பல பகுதிகளிலும் நட்டனர். இவை நூற்றுக்குப் பத்து வீதம் மாத்திரம் முளைத் தன. காரணம் என்னவென்றறிய ஆராய்ச்சி செய்தனர்.

1. தேக்கம் விதைகளை மண்ணால் மூடி மேலே நெருப்பு வைத்து இலேசாகச் சுட்டபின் அவ்விதைகளை நிரை நிரையாக நட்டனர்.

2. ஓடும் வாய்க்கால்களில் இரவில் விதைகளை வைத்து, பின் அதிகாலையில் எடுத்து வெயி லில் உலர வைத்தனர் இவ்வாறு பத்து நாட் களுக்குச் செய்தபின் இவ்விதைகளை நிரைநிரை யாக நட்டனர்.

இவ்விரண்டு முறையிலும் நூற்றுக்குத் தொண் ணூறு வீதம் முளைத்தன. இதற்குப் பின் செய்த ஆராய்ச்சியின் பெறுபேறாக ஒரு தேக் கமரம் விதையிலிருந்து முளைத்து வளர்ந்து முற்றிய மரகமாப் பலனளிக்க எடுக்கும் காலத் திலும் பார்க்க, நாற்றுப் போட்டு ஒரு வருஷத் தின் பின் முளைத்த கன்றின் நுனியைக் களைந்து அடிக்கட்டையை வேருடன் பிறிதொரு இடத்தில் நட்டால் அது பத்து வருஷங்கள் முன்னதாகவே ஓங்கி வளர்ந்து பலனளிக்கு மென அறிந்தனர்.

விதையிலிருந்து முளைக்கும் கன்று அடுத்த வருஷத்தில் வெய்யிலைத் தாங்கத்தக்கதன்று. வேர்களில் சேமிக்கப்பட்டிருக்கும் உணவின் பல னாக மரத்தின் அடிக்கட்டை அதிவிரைவாக வளர்ந்து மழைகாலம் முடிய முன் நிலைப் பரப்படுத்திக் கொள்வதால் அடுத்த வருடத்தின் உஷ்ணத்தையும் வரட்சியையும் தாங்கும் தன்மை யுடையதாகிறது.

இவ்விதமாக மற்றும் முதிரை, பாலை, கருங் காலி போன்ற காட்டு மரங்களைச் சிறந்த முறையில் உற்பத்தி செய்யப் பலவிதமான ஆராய்ச்சிமுறைகளைக் கையாளுகிறார்கள். இவ் வாராய்ச்சியின் பெறுபேறாக இலங்கையில் இயற் கையாய் இருந்திராத மரங்கள் நாட்டப்பட்டும், நோய்ப்பட்ட மரங்களும், பிரயோசனமில்லா மரங் களும் மருந்துகள் மூலம் அளிக்கப்பட்டும் காடு கள் பலவிதத்திலும் முன்னேற்ற நிலைக்கு வரு கின்றன.

---

## மணிமுடிப் பரிசு . . . . . .

(16 ம் பக்கத் தொடர்ச்சி)

**மானவ :** வாஸ்தவந்தான் கணவன் மனைவியான நமக்குத் தேவைப்படாத இலங்கை மணிமகு டத்தைப் பரிசாக என் தந்தை தப்புளுவுக்கு அளிக்கிறேன். அப்பா ! ஏற்றுக்கொள்ளுங்கள். என் மணிமகுடப் பரிசை.

**தப்புள :** மானவா ?

**சங்கா :** இலங்கை மணிமகுடப் பரிசை ஏற்றுக் கொள்ளுங்கள் மாமா !

**தப்புள :** இலங்கை மணிமகுடத்தைத் தானாக ஈந்தான் மானவன் என்ற பெயரை வரலாற்று ஏட்டிலே நிலைகட்டிவிட்டாய் மானவா ! உன் பெயர் சிரஞ்சீவியாகிவிட்டது. வாழ்க மானவன் புகழ்.

# வெற்றிலை

திரு. தே. வீரராகவன் அவர்கள்

ஓர் இனத்தாரிடையே காணப்படும் பழக்க வழக்கங்களே அவர்களின் சரித்திரத்தையும் நாகரிகப் பண்புகளையும் அறிந்து கொள்வதற்கு உதவும் அளவுகோலாகும். மனித சமூகம் வளர்வதுபோல் சரித்திரமும் பண்புகளும் அதனுடன் வளர்ந்துகொண்டே வரும். ஆதலால் அவைகளும் ஜீவனுடையனவே. நம் நாட்டிலே, சிறப்பாகத் தமிழ்நாட்டிலே வெற்றிலை சுவைக்கும் வழக்கம் எல்லாச் சாதியார்களிடமும், எல்லாச் சமயத்தார்களிடமும் பரவியிருப்பதைப் பார்த்தால், சாதி சமய வேறுபாடில்லாமல், அனைவரையும் ஆட்கொள்ளும் ஒரு கவர்ச்சி இதனிடம் இருப்பது புலப்படுகிறது.

வெறும் இலைதான் வெற்றிலையாயிற்று. வெறுமை என்ற சொல்லுடன் பண்புப் பெயருக்குக் கூறப்பட்டுள்ள விதிப்படி புணர்ந்து வெற்றிலையாயிற்று என்று தமிழ் இலக்கணம் கூறும். 'தனிமை' என்ற பொருளில் 'வெறும்' என்ற சொல் வழங்கப்படுவதற்கு வெற்றிலை ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இன்றும் உலக வழக்கில் "வெறும் சோறு மட்டும் உண்டேன்", "இன்று வீட்டில் வெறும் சோறுதான்" என்று வழங்குவதிலிருந்தும் வெறுமை என்ற சொல்லுக்குத் தனிமை என்ற பொருள் இருப்பதை அறியலாம். பூ, காய்களின்றித் தனித்த இலையாயிருத்தல் பற்றி இவ்விலைக்கு வெற்றிலையென்று பெயர் வந்தது என்று கூறுவர். இது தனித் தமிழ்ச் சொல்.

தமிழர் சமூக வாழ்விலே வெற்றிலைப் பழக்கம் எப்போது ஏற்பட்டது என்று அளவிட்டுக் கூறமுடியாவிடினும், இது தமிழ்நாட்டுக்கே உரிய பழக்கமாயிருக்கலாம் என்று ஊகிக்கப் பல சான்றுகள் இருக்கின்றன. குச்சு வீடு முதல் மச்சு மாளிகை வரையிலும், ஆண்டி வாய் முதல் அரசன் வாய் வரையிலும், பிறப்பு முதல் இறப்பு வரையிலுள்ள மங்கல அமங்கலச் சடங்குகளிலும் இந் நாட்டில் வெற்றிலை பரவியிருப்பதும், வெற்றிலையின்றி வாழமுடியாத சோழ நாட்டவரும், மலையாளிகளும் பல லக்ஷக்கணக்கில் இருப்பதும் இதன் பிறப்பிடத்தை ஒருவாறு துணிந்தறிய உதவும்.

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் திகழ்ந்த கடைச்சங்க காலத்தில்கூட இந்தப் பழக்கம் மிக்கிருந்ததென்பதற்கு இலக்கியங்கள் சான்று கூறுகின்றன. பத்துப்பாட்டில் ஒன்றாகிய பட்டினப்பாலையில், அதன் ஆசிரியர் உருத்திரங்கண்ணனார், புகார் நகரில் பல்வகைக் கொடிகள் பறந்த மாடங்களைக் குறிப்பிட்டு வரும் பகுதியில், "பாகுகுத்த மஞ்சிகை" என்று சில மாடங்களைக் குறிப்பிடுகிறார். அதற்கு உரைகாரர் நச்சினார்க்கினியர், "பாக்கு வெற்றிலை சொரிந்த கட்டிடம்" என்ற பொருள் கூறுகிறார். மதுரைக்காஞ்சி என்ற மற்றொரு சங்கப்பாட்டில் மாங்குடி மருதனார் என்ற புலவர் மதுரைநகர வீதியில் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு விற்கப்பட்ட செய்தியை,

"தகைசெய் தீஞ்சேற்று
இன்னீர்ப் பசுங்காய்,
நீடுகொடி இலையினர்
கோடுசுடு நீற்றினர்"

என்று குறிப்பிடுகிறார். இதற்கு உரையாசிரியர், "உடம்பிற்கு அழகைக் கொடுக்கும் இனிய கருங்காலி சீவிக் காய்ச்சின களிக் கலந்த இனிய நீரினையுடைய பசிய பாக்குடனே வளர்ந்த கொடி யீன்ற வெற்றிலையினையுடையாரும், சங்கு சுடுதலால் உண்டான சுண்ணம்புடையாரும்" என்று உரை வரைகிறார். கழாத்தலையார் என்னும் மற்றொரு கடைச் சங்கப் புலவர், புறநானூற்றில் 62 ஆம் பாடலில், "கணவனை இழந்த மகளிர் வெற்றிலை சாப்பிடமாட்டார்கள்; குளிர்ந்த நீரில் மூழ்கமாட்டார்கள்" என்று பொருள்படும்படி "......... பெண்டிரும் பாசடகு மிசையார்; பனி நீர் மூழ்கார்" என்று வெற்றிலை சுவைக்கும் வழக்கம் இருந்ததைப்பற்றிச் சொல்கிறார். சங்க காலத்துக்கு அணித்தாக எழுதப்பட்ட சிலப்பதிகாரத்திலே, இந்திர விழவூரெடுத்த காதையில் புகார் நகரிலுள்ள பல வீதிகளைப்பற்றியும் கூறிக்கொண்டு வரும் இளங்கோவடிகள்,

"பாசவர், வாசவர், மைந்நிண
விலைஞரொடு.........இருக்கையும்"

என்று கூறும் பகுதியில் பாசவர் என்ற சொல்லுக்கு "வெற்றிலை கட்டுவார்" என்று அரும்பத உரையாசிரியரும், "இலையமுதிடுவார்" (இலையமுது—வெற்றிலை) என்று அடியார்க்கு நல்லாரும் உரை எழுதுகிறார்கள். அதே நூலில் ஊர்காண் காதையில், "தமனிய அடைப்பை" என்று ஆசிரியர் கூறுவதற்கு, "பொன்னாற் செய்த வெற்றிலைப் பெட்டி" என்று அரும்பதவுரைகாரர் எழுதுகிறார். கொலைக்களக் காதையில்.

'உண்டினி திருந்த உயர்பெய ராளற்கு
அம்மென் திரையலோ கடைக்கா யீத்த"

என, வருகிறது. அதாவது, "உண்டிருந்த கோவலனுக்குக் கண்ணகி அழகிய மெல்லிய திரையலுடன் (வெற்றிலைச் சுருளுடன்) பாக்குக் கொடுத்த" எனக் குறிப்பிடுவதும் கருதத்தக்கது.

திருமால், சிவன் கோயில்களுக்கு நிபந்தங்கள் ஏற்படுத்திய தமிழ் மன்னர்கள் வெற்றிலை பாக்குக்கென்றே தனி நிபந்தங்கள் ஏற்படுத்தியிருந்த செய்தி கல்வெட்டுக்களால் அறியக் கிடக்கின்றது. அடைக்காய் (அடை—இலை, காய்—பாக்கு), இலையமுது, வெள்ளிலை அமுது என்ற சொற்றொடர்களால் கல்வெட்டுக்களில் வெற்றிலையும் பாக்கும் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஏழாம் நூற்றாண்டில் இருந்தவராகக் கருதப்படும் நம்மாழ்வார், திருவாய்மொழியில் திருக்கோளூர்ப் பதிகத்தில், "உண்ணும் சோறு, பருகும் நீர், தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன் எம்பெருமான் என்றென்றே" என்று குறிப்பதிலிருந்து அக்காலத்திலும் இறைவனுக்கு இலையமுது படைக்கும் வழக்கம் இருந்ததாகத் தெரிகிறது. வெற்றிலை பாக்குப் போட்டதால் சுரக்கும் எச்சிலை உமிழப் பெரிய இடங்களில் "காளாஞ்சி" என்ற வட்டில் இருந்தது. "மின்வட்டச் சுடராழி வேங்கடக்கோன் தானுமிழும், பொன்வட்டில் பிடித்துடனே புகப்பெறுவன்" என்று குலசேகரர் கூறுகிறார்.

மனித சமூகத்துக்கு வெற்றிலை புரியும் பலவித உதவிகளைக் கருதித்தான் அதை மங்கலப் பொருள்களில் சிறந்ததாக வைத்தனர்போலும். தொடக்க காலத்தில் தனித்த வெற்றிலை ஒரு மூலிகையாகக் கருதப்பட்டிருக்கவேண்டும் என்று ஊகிக்கவேண்டியிருக்கிறது. "நீர்க்கோவையைக் கெடுத்து, வாதத்தைப் போக்கி, மந்தத்தைத் தடுத்து, அஜீர்ணத்தை எடுத்து, கபத்தை அறுத்து, சுறுசுறுப்பைக் கொடுத்து குருதியோட்டத்தைத் துரிதப்படுத்தி உடல் வளர்ச்சியை அளிக்கும் ஒரு சிறந்த பொருள் வெற்றிலை" என்று வெற்றிலையைப் பற்றி ஒரு மருத்துவர் எழுதியிருக்கிறார். தேள்கடி போன்ற சாதாரண நஞ்சுக்கு மாற்றாக வெற்றிலைச்சாறு கொடுக்கப்படுவது கிராம மக்களுக்குத் தெரியும். மருந்துப் பொருளாக இருந்த வெற்றிலைதான் பின்பு இன்பமூட்டும் பொருளாக மாறி, உண்டபிறகு பாக்கு, சுண்ணும்பு, லவங்கம், ஏலக்காய் முதலிய பொருள்களுடன் இப்போது உண்ணப்பட்டு வருகிறது. உண்டபிறகு வெற்றிலைச்சுருளை மெல்லுவதால் உண்டாகும் மணம் வாய்க்கு ஒரு தனி இனிமையைத் தருகிறது. வெற்றிலை சுவைத்த பின்பு உள்ளத்தில் உண்டாகும் இன்பத்தை வெற்றிலை சுவைப்பார் அனைவரும் அறிவர். "இந்தியர்கள் சாராயத்துக்குப் பதில் போதை தரும் ஒரு பொருளாக வெற்றிலையை உண்டபின் உபயோகிக்கின்றனர். வெற்றிலை போட்டுக்கொள்வதால் மூளை வேகமாக வேலை செய்கிறது; அறிவு வளர்கிறது; கவலை போகிறது" என்று ஓர் அராபிய நூலாசிரியர் எழுதுகிறார்.

ஸுச்ருதர் என்ற ஒரு பண்டைய மருத்துவப் புலவர் தாம் எழுதியுள்ள ஒரு நூலில், "உண்டபிறகு வெற்றிலை போட்டுக் கொள்வதால், பற்களுக்கு அடிப்பாகத்தில் உள்ள பள்ளங்களிலும் இடுக்குகளிலும் புகுந்து கொண்டு இருக்கும் அழுக்கால் உற்பத்தியாகும் பூச்சிகள் கொல்லப்படுகின்றன" என்று வரைந்திருக்கிறார். பிராகிருத மொழியிலுள்ள புத்த ஜாதகக் கதைகளிலும், வட மொழியிலுள்ள ஹிதோபதேசத்திலும் வெற்றிலையின் உபயோகம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நாட்டில் எந்தச் சிறிய மங்கலச் சடங்கும் வெற்றிலை இல்லாமல் தொடங்கவும் பெறாது; முடியவும் பெறாது.

ஔரங்கசீப் மன்னர் பாரசீகத்துக்குத் தூதனுப்பிய போது, அந்நாட்டு மன்னர்க்குத் தம் அன்பின் அறிகுறியாக அங்குக் கிடைக்காத வெற்றிலையும் மாங்கனியும் அனுப்பியதாகச் சரித்திரம் குறிப்பிடுகிறது. பதினாறும் நூற்றாண்டில் விஜயநகரத்துக்கு வந்த தோமிங்கோஸ் பேஸ் (Domingos Paes) என்பவர், அந்த நகரத்து மக்களில் பெரும் பாலோர் வெற்றிலை சுவைப்பதில் பேரார்வம் காட்டியதாக எழுதியிருக்கிறார். வெற்றிலை வாங்கிக்கொள்வதற்கு ஏற்படும் செலவிற்காக ஒவ்வோர் இஸ்லாமியப் பெண்ணுக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மகம்மதியச் சட்டத்தில் பெண்களுக்கு ஓர் உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறதாம். வெற்றிலை கொடுக்கும் விஷயத்தில் வங்காளத்தில் ஒரு வேடிக்கையான பழக்கம் இருக்கிறதாம். அதாவது ஒரு பீடா (வெற்றிலைச்சுருள்) கொடுத்தால் அது சாதாரண மரியாதையையும், இரண்டு பீடாக்கள் கொடுத்தால் அது விசேஷ மரியாதையையும், வெற்றிலைத் தட்டை அப்படியே கொடுத்தால் அது பேரன்பையும் தனிப்பட்ட மரியாதையையும் குறிக்குமென்று அந்நாட்டுப் பழக்கமறிந்தவர்கள் கூறுகிறார்கள். ஒரே தட்டிலிருந்து வெற்றிலையை எடுத்துப் போடுவது ஒரு தன்மையான நிலையையோ நேசத்தையோ காட்டுமென்று இன்னும் நம்மவர் கருதுகின்றனர்.

ஆங்கில ஆட்சி இந்நாட்டில் ஏற்படுவதற்கு மூன்று நான்கு நூற்றாண்டுகட்கு முன்பு, இங்கு வந்துபோன மேல்நாட்டாரில் சிலர் நம்மிடையே காணப்படும் வெற்றிலைப் பழக்கத்தைக் குறித்துப் பல சுவையான குறிப்புக்களை எழுதி வைத்திருக்கிறார்கள். ஹீராட்டைச் சேர்ந்த அப்துல் ரசாக் என்பவரை விஜயநகர மன்னன் வெற்றிலையும் கர்ப்பூரமும் கொடுத்து வரவேற்றானாம். "ஐரோப்பிய மன்னர்களிடமிருந்து பெறும் வீரப் (Knighthood) பட்டத்தைப் போன்ற சிறப்புடைய தாகும் இந்திய மன்னர்களிடமிருந்து வெற்றிலை

பெறுவது" என்று தாமஸ் பௌரி (Thomas Bowrey) என்ற மற்றொரு யாத்திரிகர் குறிப்பிடுகிறார். இவற்றை யெல்லாம் விட அலெச்சாந்தர் ஹாமில்டன் (Alexander Hamilton) என்பவர் கூறும் வரலாறு சற்று விசித்திரமாக இருக்கிறது. 1694 ஆம் ஆண்டில் ஹாமில்டன் கடார நாட்டு (Kedha) மன்னரைக் காணச் சென்றாராம். அம்மன்னர் ஹாமில்டனைத் தம்மருகில் உட்கார வைத்து அவருக்கு மரியாதை காட்டும் முறையில் தாம் தின்று கொண்டிருந்த வெற்றிலையை ஒரு பொற் கிண்ணத்தில் உமிழ்ந்து அதை "மரியாதையுடனும்" அடக்கத்துடனும் ஹாமில்டனை உண்ணும்படி செய்தாராம். அரசர் உண்டு உமிழ்ந்த தம்பலத்தை உண்பது அரசரால் மிகுதியும் பாராட்டப்படும் ஒரு செயலாக இருந்ததாம்.

தூக்கிலிடப்படுவதன் முன்னர்க் கொலைக் குற்றவாளிகளுக்கு வெற்றிலை பாக்குக் கொடுக்கும் வழக்கம் நீண்டகாலம் இந்நாட்டில் இருந்து வந்ததாம். சிறையில் அடைபட்டுக் கிடப்போருக்கு மலேரியா போன்ற நச்சுக்காய்ச்சல்கள் வாராமலிருக்கும் பொருட்டு நெதர்லாந்து அரசாங்கம் கைதிகளுக்கு வெற்றிலை கொடுத்து வந்ததாம். மலேயா நாட்டில் சண்டையிட்டுக் கொண்ட இருவர் தங்களுக்குள் வெற்றிலை மாற்றிக் கொண்டால் சமாதானமாகப் போய்விட்டதாகக் கருதுவராம். ஒன்றைப்பற்றித் தங்களுக்குள் ஒப்பந்தம் செய்துகொள்ளும் இருவர் முடிவில் தங்களுக்குள் வெற்றிலை மாற்றிக் கொள்ளும் பழக்கம் இன்னும் நம் நாட்டில் உண்டல்லவா?

வெற்றிலையைப்பற்றிச் சில மூடக் கொள்கைகளும் ஒட்டிக்கொண்டிருக்கின்றன. சைனக்காரர்கள் வெற்றிலையை ஒருபொழுதும் இடது கையால் வாங்கமாட்டார்களாம். மதுரையை ஆண்ட அரசி மங்கம்மாள் ஒரு சமயம் வெற்றிலையை இடது கையால் எடுத்து விட்டு குற்றத்துக்காகக் கழுவாய் பல செய்துநோன்பு நோற்றதாக அவள் சரித்திரம் கூறுகிறது. மலையாள நாட்டில் இழிவர் என்ற இனத்தாரிடையே ஒரு பழக்கம் இருக்கிறதாம். அதாவது சூல்கொண்ட ஒருத்திக்கு இன்ன குழந்தை பிறக்கும் என்பதை அறிய அக்குலத்தில் மூத்தாள், ஒரு வெற்றிலையை எடுத்து அதன்மேல் எண்ணெயை வார்த்து அந்த வெற்றிலையைக் கர்ப்பிணி உந்திமேல் பிடிக்க எண்ணெய் எந்தப் பக்கம் வழிந்தோடுகிறதோ அதிலிருந்து இன்ன குழந்தைதான் அவளுக்குப் பிறக்கும் என்று கூறிவிடுவாளாம்.

வெற்றிலை வியாபாரத்தில் அரசாங்கத்துக்கு நல்ல வருமானம் பழங்காலத்திலிருந்து வந்ததாகத் தெரிகிறது. வெற்றிலை விற்போருக்கு வரி விதிக்கப்பட்டிருந்ததைப் பண்டை நூல்களிலிருந்து அறியலாம். பதினாறும் நூற்றாண்டில் கிழக்கிந்தியக் கம்பெனி, இந்திய மன்னர்களிடமிருந்து வெற்றிலை வியாபாரத்தைத் தனிச் சலுகையாகப் பெற்றுக் கொண்டது என்று போர்த்துக்கீசிய அதிகாரி ஒருவர் எழுதியுள்ளார். கிழக்கிந்தியக் கம்பெனியில் வேலை பார்த்து வந்த ஆங்கிலேயர்களின் சொந்த வருமானத்தைப் பெருக்க, 1765 ஆம் ஆண்டில், கிளைவ் வங்காளத்தில் ஒரு வியாபாரக் கழகத்தை ஏற்படுத்தி அதன் மூலமாய் வெற்றிலை, உப்பு, புகையிலை முதலியன விற்று லாபம் பெற உரிமை கொடுத்திருந்த வரலாறும் இங்கு நினைவு கூரத்தக்கது.

தமிழ்நாட்டில் வெற்றிலைப்பயிர் செய்வதற்கென்றே ஓர் இனத்தார் பண்டை நாட்களில் இருந்ததாகத் தமிழ் நூல்கள் குறிப்பிடுகின்றன. "இலைவாணியர்கள்" என்றும், "கொடிவேளாளர்கள்" என்றும் அவர்கள் நூல்களில் குறிக்கப்பட்டுள்ளனர். அக்காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் வெற்றிலை விற்கும் இடமாக இருந்த ஓர் இடம் இக்காலத்தும் "இலை யமுது கூடம்" என்ற பெயருடன் அவ்வூருக்கு மேற்கே சற்றுத் தூரத்தில் இருந்துவருகிறது.

பிற நன்செய்ப் பயிர்களைப் போன்று அவ்வளவு எளிதாக வெற்றிலையைப் பயிர்செய்துவிட முடியாது. செம்மண் கலந்த களிப்பு நிலத்தில்தான் வெற்றிலை நன்கு பயிராகும். தஞ்சை ஜில்லாவில் பண்டாரவாடை, கும்பகோணம் முதலிய இடங்களிலும், தென்னார்க்காட்டில் கூடலூர், நெல்லிக்குப்பம் முதலிய இடங்களிலும், செங்கற்பட்டு ஜில்லாவில் மதுராந்தகம், கருங்குழி முதலிய இடங்களிலும், மலையாளத்திலும் கிடைக்கும் வெற்றிலை சிறந்ததாம். வெள்ளை வெற்றிலை, பச்சை வெற்றிலை, கர்ப்பூர வெற்றிலை, ரவேசி வெற்றிலை என வெற்றிலையில் பல இனங்கள் உண்டு. இரண்டாண்டுகளுக்கு மேற்பட்ட வெற்றிலைக் கொடிகளைக் கத்தரித்து வரிசையாக நடுவார்கள். கொடிகள் நன்கு தளிர்த்து இலைகள் விட்டபிறகு இரண்டு வருஷங்களிலிருந்து ஐந்து வருஷகாலம் வரையில் வெற்றிலையைக் கிள்ளுவார்கள். மழைக்காலத்தில் வெற்றிலை நிறையக் கிடைக்கும். ஆனால் சுவை குறைந்திருக்கும். வெயிற்காலத்தில் கிடைக்கும் வெற்றிலை அளவில் சுருங்கியிருப்பினும் சுவை மிக்கதாய் இருக்கும். நம் தேசத்தில் சில மாகாணங்களில் வெற்றிலை வியாபாரம் கூட்டுறவு முறையில் நடைபெற்று வருகிறது. வெற்றிலைப் பயிரால் அதனுடன் தொடர்புடைய பாக்குத் தொழில், சுண்ணாம்பு சுடல், வெற்றிலைக் கூடை முடைதல், புகையிலை பதனிடல் போன்ற வேறு பல குடிசைத்தொழில்களும் வளர்ச்சி பெறுகின்றன.

(கலைமகள்)

# யாத்திரை

அருட் திரு. விபுலானந்த அடிகளார்

"மலையே மலையே வா" என்று ஒருவர் கூப்பிட்டாரென்றும், மலை வாரா தொழியவே, "யானே மலையிடம் போய் வருகிறேன்" என்று அவர் போனாரென்றும் ஒரு கதையுண்டு. நாம் கல்லுப்பிள்ளையார் மாதிரி இருந்தபடி இருந்து கொண்டு இன்ப வாழ்க்கையை "வா" என்றால் அது வந்துவிடாது. நாமே எழுந்து அதனிடம் போக வேண்டுவதுதான். கஷ்டங்களைப் போங்களென்று கெஞ்சினாலும் அவை போகமாட்டா ; நாம் விலகிக்கொள்ளவேண்டுவதுதான் ; பொருட்படுத்தாமலிருக்க வேண்டுவதுதான். நாம் ஒரு பெரியாரோடு பழக முடியவில்லை என்றால் நாமே அவரைப்போல ஆகிவிடுவதுதான் செய்யவேண்டுவது. ஒருவனுக்குச் சாத்தியமானது எல்லோருக்கும் சாத்தியமானதே என்பது பெரியோர் அனுபவம் "இன்ன வழி ஒழுகினால் இறைவனோடு கலக்கலாம். இன்ன நிலையடையலாம் என்பதல்லாமல், இன்ன உயிர்தான் இறைவனையடையலாம் ; இன்ன நிலையடையலாம், என்பதில்லை. "எவனும் மூன்றே நாட்களில் இறைவனைக் காணலாம் என்று ஒரு பெரியார் கூறினார் அது நம்பக்கூடியதாக இல்லை. ஆனால் மூன்று மணித்தியாலங்கள் முப்பதே நிமிஷங்கள் உலகைமறந்து இறைவனை நினைந்து உணர்வுகெடமுடியாத நமக்கு அது பிழையேயல்லாமல் ஒரு நாள் இருபத்துநான்கு மணித்தியாலங்களும் சமாதிகூட வல்ல பெரியோர்க்கு அதுமுழு உண்மையேயாகும்.

பிழை செய்வது நமக்கு இயற்கையாகி விட்டதே ! என்று விளையாட்டுப் பேச வேண்டா. இயற்கை என்பது சென்ற பிறப்புக்களின் செயற்கை. இப்பிறப்பின் செயற்கை இப்பிறப்பிலோ மறுபிறப்புக்களிலோ இயற்கையாக மாறுவதுதான் ஆவியும் நீரும் போல சமரேகைப் பகுதியில் மழையும் நீராவியும் நாள்தோறும் ஒன்றொன்றாக மாறிக்கொண்டிருக்கின்றன. வேறிடங்களில் அம்மாற்றத்துக்குக் காலமதிகமாகிறது. அவ்வளவுதான் நம்முள் மிகப் பெரும்பாலோர் அடுத்த பிறப்பிலே இப்பிறப்பிலும் மிகத் தாழ்ந்த இடத்தில் விழப் போகிறார்கள். இவ்வளவு நல்வாழ்வு கிடைத்திருந்தும் கஷ்டம் கவலை என்ற பாடம் படிக்கிறவர்கள், தங்கள் அடுத்த பிறப்பை அறியக்கூடுமானால், நடுங்கிச் சாகவேண்டுவதுதான். ஒருவனுடைய அடுத்த பிறப்பு எவ்வாறமையக்கூடும் என்பதைக் கொண்டுதான் அவன் உயர்ச்சியை நாம் அளக்க வேண்டும். மறுபிறப்பில்லை என்கிற உலோகாயதனுடைய குருட்டு வழிகளும் வாயாலில்லா விட்டாலும் வாழ்க்கையால் அவன் மதத்திலேயே நிற்கும் ஏனையோர் தம் ஆசை வழிகளும் இளமை செல்வம் அதிகாரம் மூன்றுமுள்ள வரைக்குமே அவர்க்குச் சரியாயிருக்கும் அப்புறம் அரகராதான் !

மனமாகிய எந்திரத்தைச் சன்மார்க்க வழியிலே இழுத்துத் திருப்புமட்டும் கஷ்டந்தான். திருப்பி விட்டால், சுகம் முடிவிலே கிடைக்குமென்பதன்று, போகப் போக அது வளர்ந்துகொண்டு போகும். அன்னையை நெருங்குகிற குழந்தையைப் போல, வில்லுக்கத்தியை முதலில் மடிப்பது கஷ்டமாயிருக்கிறது. ஓர் எல்லை வந்ததும் அது தானே விழுந்து விடுகிறது. உரிய இடத்திலே மேசையிலிருந்து புத்தகத்தை வீழ்த்துதற்கு ஓர் எல்லை மட்டும் நம்முடைய முயற்சி வேண்டும். அப்புறம் பூமியே அதை இழுத்துக் கொள்கிறது. ஓர் எல்லை மட்டும் கொண்டுவந்து விட்டால், மனமும் தானே போகும் உரிய இடத்துக்கு. மனிதனால் எவ்வளவு தூரம் உயரப் போக முடியும் ? எவரெஷ்டுக்கு மேலேயும் போக முடியுமா என்று ஒரு கை பார்க்கத்தான் வேண்டும். போய்க் காட்டத்தான் வேண்டும் நம்பாதவர்களுக்கு. உயர உயரப்போனால் உலகப் பொருள்கள் எப்படியாகுந் தெரியுமல்லவா ? சிறிது சிறிதாகக் கடைசியில் தெரியாமலே போய்விடும். உலகத்திலே நிற்பவர்களையும் போகிறவர்களையும் காணக்கூட முடியாத நிலை வந்து விடும். உயர்ந்த இலட்சியத்தை நாடி உழைக்கும் உத்தமனுடைய கவனத்திலிருந்து மெல்ல உலக விஷயங்கள் நழுவிவிடுகின்றன. அவனுடைய உண்மை வாழ்க்கையின் இரகசியத்தை உலகமக்கள் உணர முடியாமற்போகிறது.

நாம் மேலே போனால் நல்லதென்பதன்று "போயே தீர வேண்டுமா ? போவதற்கு இது வரை காணப்பட்ட வழிகள் சரிதானா ? என்று கீழே நின்று கொண்டே அண்ணாந்து பார்ப்பது பிழை. வேண்டுமானால், பழைய வழிகளாற் போகக் கூடிய மட்டும் போய் அப்புறம் ஆலோசித்துக்கொள்ளலாம். இங்கு நின்றே ஆராய்வதானால் ஆராய்ச்சி முடியுமுன் பிறப்பு முடிந்துவிடும். மறுபடியும் நின்ற

இடத்தில் அல்லது இன்னுங் கீழே நின்றுதான் பார்க்க வேண்டுவதாகும். நம்மைக் காட்டிலும் எல்லாவழியிலும் எவ்வளவோ சிறந்த எத்தனையோ பெரியோர்கள் ஆராய்ச்சி செய்த முடிபுகளை விட்டு—ஒரே விதமான முடிபுகளை விட்டு முதலிலிருந்து தொடங்குவோமென்பது மடமை. பழைய வழிகள் பிழையென்பதானாலும் அவ்வழிகளிற் சென்றேதான் காணவேண்டும்.

புலமைச் செருக்கு ஏறி முன்னர்—உலக சுகங்கள் முழுவதிலும் விழுந்து சுவை பார்க்கு முன்னர் வயதுவந்துவிட்டதென்றமனோபாவத்தால் மிருகப் போக்கான காரியத்தலைமை அதிகாரத் திமிர் தலை தூக்கு முன்னரே தூசியைக் காட்டிலுந் தன்னைத் தாழ்த்திக்கொள்ளுகிற தாழ்வுள்ளத்தை பத்தி வாழ்க்கையைத் தரவல்ல நூல்களைப் படிக்க வேண்டும். ஊசியோடு தொடர்ந்து செல்லுகிற நூலைப்போல, படிப்போடு செயல் தொடர்ந்து போக வேண்டும். துணியை நூலில்லாமலே ஊசியால், குத்திக்கொண்டிருப்பதால் என்ன பயன்? நல்ல வழியிலே சிறிது பழகிக்கொண்டால், அனுபவ உணர்வு அரும்பத் தொடங்கி விட்டால் நல்ல நூல்களிற் சுவை பிறந்துவிடும். "என்னை எப்படித் திருத்தலாம்? என்னைத் திருத்த எனக்குப் பொருத்தமான வழி எது? என்ற கேள்விகள் எழுந்து கொண்டேயிருக்கும். அவைகளுக்கு நல்ல நூல்களோடு தன்னுடைய அனுபவமும் மறுமொழிகொடுக்கும். நல்ல குருவைக் கண்டு பிடிப்பது கஷ்டம். ஆதலால், நல்லறிவுடையோர் பாராட்டும் நூல்களையே தெரிந்து படிக்கவேண்டும். போகப் போக, தான் அனுபவத்திற் கண்ட உண்மைகளைப் பெரியோர் பலர் எழுதி வைத்திருப்பதை அறியலாம். நூலறிவு, அனுபவ உணர்வைத் தோற்றுவிப்பதற்கு மட்டுமே உபகாரப்படுகிறது. கதவைத் திறப்பது அனுபவ உணர்வு; பூட்டை விடுவிப்பது நூலறிவு. இயற்கை அழகுகளிலே தோய்ந்தின்புறுந்திறனைத் தருவது காவியப்படிப்பு. அன்னம் தாமரை மலர்ப் படுக்கையிலே அலைக் கையாலே தாலாட்டப்பட்டு நித்திரை கொண்டது என்று படிப்பது கற்பனை ததும்புகிற கவியுள்ளத்தைப் பெறுதற்கேதான். அனுபவ உணர்விலுள்ள பிழையைத் திருத்துவது கல்வி, அனுபவ உணர்வு நிமிர்ந்து விட்டால் புத்தகங்களே வேண்டுவதில்லை. "குருவில்லாவித்தை பாழ் என்பது, குருவில்லாமல் சரியான பொருளை அறிவது மகா கஷ்டம் என்பதனாலே தான். திருவருளை வேண்டிக் கொண்டு சன்மார்க்கத்தின் ஆரமப விதிகளிலிருந்தே முழுவதையுஞ் செய்து கொண்டு போனால், அச்செயல்களே குருவாய் நின்று உண்மைப் பொருளைத் தெளிவாகக் காண்பிப்பன. திருவருளொளியிலே அனுபவ உணர்வு விளங்கும்போது அது மெய்யறிவென்று வழங்கப்படுகிறது.

நல்லோர் அருளுரைகளோ, நல்வாழ்க்கையின் அனுபவங்களோ, மனத்தில் நல்லுணர்ச்சியலைகளை எழுப்புகின்றன. அவ்வாறு எழுகிற ஒவ்வொரு சிறிய நல்லலையும் ஒவ்வொரு தள்ளுத் தள்ளி நம்மை உண்மை நெறியிலே உயரச் சேர்க்கவேண்டும். கொடிகள் மரத்தை சுற்றிக்கொண்டு வெளிச்சத்தை நாடி மேலே போய்ப் பூத்துப் பொலிகின்றன. பெரியோர் காட்டும் வழிகளைப் பற்றிக் கொண்டு அருளொளியை நாடி மேலே செல்வோமானால் இன்பம் பொலியும். எத்தனையோ அலைகள் எழுந்து மடங்குகிற பெருங்கடலிலே மூழ்கிவிடாமலும் இடம் பெயராமலும் நேற்றுப் போட்ட இடத்திலே இன்றைக்கும் கிடக்கிறது மிதவை. உலகக் குழப்பங்களில் அழுந்தாமை மட்டு மன்றி அவற்றுற் சிறிதும் நிலை. பெயராமலே ஆசைச் சுமையற்ற எளிய உயர்ந்த உள்ளமுடையான் உலகத்தினிடையே வாழ்வான்.

"நன்னெறிச் செல்வோனுக்கு வெற்றியே யல்லாமல் தோல்வியில்லை என்பார்கள். அவனும் பிறரும் அவனுக்கு வருகிற வெற்றிகளைத் தோல்வி என்று பிழைபட எண்ணிவிட வேண்டிய சந்தர்ப்பம் வருகிறதல்லாமல், தோல்வியே வருவதில்லை.

தாமும் நல்வழியிலே போகாமல், நம்முடைய அறிவைக் குழப்பி நம்மையும் தம்மோடு வைத்துக் கொள்ள ஆசை கொள்ளுகிற வீணர்கள் பேசும் மயக்க நியாயங்கள் முழுதுக்கும் பெரியோர் எப்பொழுதோ மறுமொழி கொடுத்திருக்கிறார்கள். நாம் அவ்வீணரை விட்டுப் பெரியோரிடம் சரண்புக வேண்டும். அழுகி, நாற்றமெடுத்த இரணத்தைக் கூசாமல் வைத்தியனுக்கு அவிழ்த்துக் காட்டுகிறோம். அவனிடம் ஒப்படைக்கிறோம். அவன் அளவற்ற பொறுமையோடும் இரணத்தைக் கழுவித் தூய்மை செய்து மருந்து கட்டுகிறான். அழுக் கடைந்து புண்பட்ட அருவருப்பான நம் மனத்தைப் பெரியோர்க்குத் திறந்து காட்டவேண்டும். அவர்கள் தங்கள் அருண்மொழிகளாலே நம் மனத்தைத் தூய்மை செய்து, ஆசீர்வாதமாகிய மருந்தையளித்து, நம்மைக் காப்பார்கள்.

அழகான பட்டு வஸ்திரம் சும்மா கிடைத்தது; நல்ல மல்லிகைப் போது வீணாகக் கிடக்கிறது; இவைகளை உபயோகிப்பதால் என்ன

நஷ்டம்? ஏன், பொன்னாலே செய்யப்பட்ட கூரிய கத்தி வழியிலே கிடந்தது, எடுத்து இருதயத்திலே குத்திக்கொள்ளலாமல்லவா? பெரிய ஜனக்கூட்டம்—நல்ல சந்தர்ப்பம்— நம்முடைய பெருமையைக் காட்டிக் கொள்வதற்கு; விலையுயர்ந்த பட்டாடைகள் தூய கதராடைகள் எல்லாவற்றையும் ஒரே முறையாக அணிந்து கொண்டு போகலாமல்லவா? இவைகளைப்போலத் தான் தேவைக்கு மேல் எந்தப் பொருளை உபயோகித்தலும்.

விளக்கின் ஒரு புறத்திலே ஒளிப்போக்கைத் தடுத்தால், மறு புறத்திலே பிரகாசம் அதிகமாகும். அந்த ஒளி மடங்குதலால் கண்ணாடிக்குள் ஒளி நுழையாதபடி இரசம் பூசிவிட்டால் பொருளின் சாயை தங்கித் தோன்றுகிறது. அதனுள்ளே ஐம்புலனாகிய ஓட்டைகளை அடைத்து விட்டால், கீழ் நோக்கியிராமல் திருப்பிவிட்டால், மனத்திலே ஊறும் பரமானந்தம் தேங்கி நிற்கும். பழவினையால் வருகிற கஷ்டங்களை வெறுப்பின்றி ஏற்பதுடன் பரநலத் தொண்டு கடவுள் வழிபாடுகளாலும் உடலை வருத்திப் பயன் கொண்டால், உயிர் உயர்வுறும்; உள்ளின்பம் பொங்கும். எவ்வளவு வெளியின்பங்களை விலக்குகிறோமோ அவ்வளவும் உயர்ந்த உள்ளின்பமாக மாறிவரும். புலன்கள் உண்ண உண்ண உயிர் பட்டினி கிடக்கிறது. பரீட்சைக்கு எழுதிவிட்டு வந்திருக்கிறோம். எழுதியதற்கு ஏற்பத்தான் இப்பொழுது முடிவு வரும். இப்பொழுது படிப்பதன் முடிபை அடுத்தமுறை பெறலாம். ஒரு கஷ்டம் வந்துவிட்டதென்று கடவுளை நேற்று நிறையக் கும்பிட்டோம். இன்றைக்கு அதைவிடப் பெரிய கஷ்டம் வந்து விடுகிறது. ஏன் தெரியுமா? எப்பொழுதோ அதனை இரந்து வேண்டி உடன்படுத்திக் கொண்டோம், இன்ன நாளில் வரவேண்டுமென்று அது வந்து விட்டது. கடவுள் நம் முன்னைய வேண்டுகோளையா பின்னைய வேண்டுகோளையா நிறைவேற்றுவது? நேற்றைக்கு "ஐயா சுவாமி, பகவானே, எனக்கு அது கட்டாயம் கிடைக்க வேண்டும்; என்று அழுதோம். இன்றைக்கெழுந்து "எம்பெருமானே, அது வந்துவிடப்போகிறதே! அதை வராமற் செய்ய வேண்டும். ஈசா என்று பதைக்கிறோம். அது வந்து தான் விடுகிறது. வாயைப் பிளந்து கொண்டு ஏற்கவேண்டுவது தான் அதனை. வருவது வருக! என்றிருந்தால், இந்தக் கஷ்டங்கள் வந்திராவல்லவா? இறைவனை நோக்கி "ஐயா நீயேகதி. எது செய்வதாயினும் செய்து கொள் என்று கூறிவிட்டிருந்தால், அவன் நம்மை வருந்தவிட்டிரானல்லவா?

பஞ்ச சீலங்கள் புத்த மதத்தினர்க்குரியன: இயம நியமங்கள் யோக மதத்தினர்க்குரியன; அஷ்ட புஷ்பங்கள் சைவர்க்குரியன! என்று பொதுவான நல்லறங்களிலேயும் போருக்கும் தலையெடுக்க விடுதல் அழியும் வழியாகும். நன்னெறியிலே செல்வோனுக்கு நல்லன வெல்லாமே கடனாகும். உண்ணா நோன்பு ஆருகதர் நெறியென்று அந் நோன்புடையாரை ஆருகதராகப் பார்த்தால், உபவாச விரதங்களை என்ன செய்வது?

மெய்ப்பொருளை அடைவதற்குரிய செம்மை வழியைக் கண்டு அதிலே செல்லத் தொடங்கினேன், மற்றவர்களையும் அழைத்துக் கொள்வது கடன். ஆனால், தீவினையாளருக்கு எவ்வளவு கூறினாலும், அவர்கள் திருந்தமாட்டார்கள். அதற்கு ஒரே வழி தன்னைக் கூடு மட்டுந் திருத்திக் கொண்டு தன்மேற் படிந்த கடவுட் காற்றை அவர்மேல் வீசச் செய்வதே. அவர்களோடு தோயாது தோய்ந்து உறவாடி நிற்றலே.

விபுலாநந்த அமுதம்.

---

## முதலியார் சிற். கைலாசபிள்ளை . .

(19 ம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளையவர்கள் அரசாங்க சேவையிலிருந்து தமிழ் மொழிக்கும், சைவ சமயத்துக்கும் அருந்தொண்டாற்றினார்கள். அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு முதலியார் கைலாசபிள்ளையவர்களுடைய வாழ்க்கை வழிகாட்டியாக அமைந்துள்ளது எனக் கூறலாம். முற்காலத்தில் அரசாங்கசேவையிலிருந்த ஒரு சிலர் தமிழுக்கும் சைவத்துக்கும் பெருந் தொண்டாற்றியுள்ளனர். அவர்களைப் பற்றி இன்னொரு முறை கூறுவாம். பிள்ளையவர்கள் 1916 ல் காலமானார்கள். இவருக்குப் பின் இவருடைய தாயாரின் சகோதரி புத்திரராகிய வைத்தியநாத முதலியார் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டார். கொழும்புத்துறை புலவர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் தோன்றுவதற்கு நிலைக்களனாக இருந்தது மாத்திரமன்றி யோகீஸ்வரர் அவதரிப்பதற்கும் ஏற்ற புனித இடமாக விளங்கியுள்ளது.

# அறநூல்களும் பக்திப் பாடல்களும்

[கலாநிதி ஆ. சதாசிவம் அவர்கள்]

தமிழில் அறநூல்கள் பெருந்தொகையாக எழுந்த காலம் சங்கமருவிய காலமாகும். அக்காலச் சமுதாயச் சூழ்நிலை அறநூல்கள் எழுவதற்கு மிக வாய்ப்பாக இருந்தது. முடியுடை வேந்தரின் ஆட்சி ஏறக்குறைய கி. பி. 3 ம் நூற்றாண்டு வரை நிலை குலையவே, களப்பிரர் என்னும் ஒரு சாதி மக்கள் தமிழ்நாட்டுட் புகுந்து பெரும் பகுதியைக் கைப்பற்றி ஆண்டனர். இவர்கள் சமண சமயத்தவர்கள். அக்காலத்தில் தமிழ் நாட்டிலே வசித்த சமண பௌத்த துறவிகள் களப்பிரரின் ஆட்சியின்கீழ் தம் மதங்களை நாட்டிலே பரப்ப முற்பட்டனர். இவ்விரு மதத்தினரும் அறத்தைப் போதிப்பவர். இந்த உலகம் நிலையற்றது; வாழ்வாவது மாயம்; சந்தனம் தைலம் என்பன கொண்டு இந்த உடலைப் பூசி அழகு செய்தலிற் பிரயோசனமில்லை; எல்லாரும் இறப்பது திண்ணம்; ஒருவர் முந்தி இறக்கிறார்; மற்றவர் சற்று பிந்துகிறார்; எனவே வாழ்க்கையைத் துறப்பதே தலையான அறவழி; இவையே அவர் மதக்கொள்கைகள். இவ்விரு மதத்தினரும் தம் கொள்கைகளை நாட்டிற் பரப்ப முற்பட்ட காலத்தில் வைதீக மதம் செல்வாக்குடன் இருந்தது. பொருள்கொண்டு யாகங்கள் வேள்விகள் செய்து மறுமையில் இன்ப உலக வாழ்க்கையை நாடிய பணக்காரர் சமண பௌத்தரின் போதனைகளுக்குத் தலை சாய்த்தார்களில்லை. நுண்மதியுள்ள சிறார்களும் கற்றோரும் தம் மதப் பிரசாரத்திற்குச் செவி சாய்க்கவேண்டுமென விரும்பிய சமணத் துறவிகள் அவர்கள் விரும்பத்தக்க அறநூல்களை எழுதலாயினர். இளஞ்சிறார்கள் நெட்டுருப் பண்ணத்தக்கதாக அற உபதேசங்களையும் நீதிகளையும் பழமொழிகளையும் வெண்பாயாப்பில் அமைத்து நூல்களை ஆக்கினர். இவர்கள் இயற்றிய நூல்களுட்பல பதினெண் கீழ்க்கணக்கு என்னுந் தொகுதியில் அடங்கியுள்ளன. அவையாவன: திருக்குறள், நாலடியார், நான்மணிக் கடிகை, இனியவை நாற்பது, இன்னா நாற்பது, திரிகடுகம், ஆசார கோவை, சிறுபஞ்ச மூலம், முதுமொழிக் காஞ்சி, எலாதி, பழமொழி நானூறு என்னும் பதினொரு நூல்கள். இவற்றுள் நாலடியார் தனிப்பட்ட ஒரு புலவராற் பாடப்பட்ட நூல் அல்ல. இந்நூலில் உள்ள நானூறு வெண்பாக்களும் நானூறு சமண முனிவர்களாற் பாடப்பட்டவை. முன்னொரு காலத்தில் இந்தியாவிலே பெரிய பஞ்ச மேற்பட்டதென்றும், அப்போது நாட்டின் பல பாகங்களில் வசித்த சமண துறவிகள் செழிப்புற்றிருந்த பாண்டி நாட்டிற் புகலிடம் பெற்றனர் என்றும், பாண்டியன் அவர்களுக்கு ஊனும் உடையும் கொடுத்துப் பாதுகாத்து வந்தான் என்றும் வரலாறு ஒன்று உண்டு. இவர்கள் தாம் தாம் வாழ்ந்த நாடுகளில் பஞ்சம் நீங்க மறுபடி திரும்பிப்போக விடை தரும்படி பாண்டியனைக் கேட்டனர். அவனோ கல்வி கேள்விகளில் வல்ல முனிவர்களை விட்டுப் பிரிய மனமில்லாதவனாய்க் கவலைகொண்டான். இதை அறிந்த முனிவர்கள் எண்ணாயிரம் பேரும் தாம் தாம் படுத்திருந்த படுக்கையில் கீழ் ஒவ்வோர் வெண்பாவைப் பாடி, விட்டுச் சென்றுவிட்டனர். இவர்கள் புறப்பட்டதைக் கேள்விப்பட்ட பாண்டியன் அவரவர் படுத்திருந்த படுக்கைகளை ஆராயும்படி ஏவலாளர்களை ஏவினான். அவர்கள் கண்டெடுத்த வெண்பாக்களின் பொருளை அறிய ஆவல்கொண்ட பாண்டியன் அவற்றை வைகை நதியில் போட்டான். அவை நதியின் பெருக்குக்கு எதிரே வந்தன. ஏனைய நீருடன் அடித்தள்ளிக்கொண்டு போகப்பட்டன. பெருக்குக்கு எதிரே வந்த நானூறு பாடல்களையும் ஒரு சேரத் தொகுக்கப்பட்ட நூலே நாலடியார் என்பது. நாலடியார் தவிர்ந்த ஏனைய நூல்கள் பத்தும் தனிப் புலவர்களாற் பாடப்பட்டவை. இவ்வற நூல்களுள் சிறந்தனவாகக் கற்றோரால் மெச்சப்படுபவை திருக்குறளும் நாலடியாருமாகும். நாலடியார் நான்கு அடி வெண்பாக்களின் தொகுதி. திருக்குறள் ஈரடிக்குறள் வெண்பாக்களின் தொகுதி. "ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி" என்னும் பழமொழியில் சுட்டப்பட்ட "நாலு" என்பது நாலடியாராகும். இரண்டு என்பது திருக்குறளாகும். இங்ஙனம் கற்றோராற் புகழப்படும் இவ்விரு அறநூல்களின் சிறப்புக்கள் எவை எனக் காண்போம்.

பாரில் உள்ள நூல்களிற் சொல்லப்பட்ட பொருள்கள் அத்தனையும் ஒருசேரத் தொகுத்து 1330 குறள் வெண்பாக்களில் குறுகத் தறித்து "பொதுமறை" என்னும் திருக்குறளை ஆக்கித்தந்த வள்ளுவரைப் புகழ்ந்து அவர் காலத்தவராற் பாடப்பட்ட புகழ்மாலையே திருவள்ளுவமாலை என்பது. இன்று உலகில் வழங்கும் இருபத்திரண்டு மொழிகளில் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இது ஒன்றே திருக்குறளின் பெருமையைக் காட்டப் போதிய சான்று. இங்ஙனம் அன்றும் இன்றும் வாழ்கின்ற உலக மக்களாற் புகழப்படும் நூலில் அமைந்த தனிச்சிறப்புக்கள் எவை என்பது நாம் காணவேண்டியதொன்றல்லவா? உலக மக்களுக்கு உறுதி பயக்கும் பொருள்கள் நான்கு. அவையாவன: அறம், பொருள், இன்பம், வீடு என்பன.

இறுதியாகிய வீட்டைப்பற்றிக் கூறினர் இவ்வுலகில் யாருமே இல்லை. ஏனெனில் வீட்டுலகமாகிய மோட்சத்தை அடைய முடியாத நாம் அதன் இலக்கணத்தை எங்ஙனம் கூறமுடியும். வள்ளுவர் அறம், பொருள், இன்பம், (காமம்) ஆகிய மூன்றினையும் விளக்கி, இவற்றின் வழியதே வீடு எனக் காட்டுகின்றார். திருக்குறள் அறத்துப் பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் முப்பிரிவுகளையுடையது. இவை முறையே 38, 70, 25 அதிகாரங்களைக் கொண்டுள்ளன. அறத்துப்பாலில் இல்லறம் துறவறமாகிய இருவகைத் தருமங்களையும், பொருட்பாலில் அரசன் அவன் ஆட்சிமுறை, அமைச்சர் தூதர் என்பன போன்ற பொருள்களையும், காமத்துப்பாலில் இன்பத்தையும் செவ்வனே விளக்கிச் செல்கிறார் ஆசிரியர். இனி "அறம்" என்பதற்கு வள்ளுவர் கொள்ளும் பொருள் "தலையாய வழி" என்பது. சமணத்துறவிகள் இல்லறத்தை இழித்துக் கூறுபவர். வள்ளுவரோ இல்லறத்துக்கே முதன்மை கொடுத்துள்ளார் என்பதை அறத்துப்பாலைப் படித்தறியலாம். தம் நூலில் முதலில் இல்லறத்தை விளக்கியே பின் துறவறத்தை விளக்குகின்றார். இல்லறமும் உயர்ந்தது. துறவறமும் உயர்ந்தது. இல்வாழ்வாரின்றி உலகம் இல்லை. ஏனெனில் அவரே பிரமச்சாரி. வானப் பிரஸ்தன் சந்நியாசி ஆகியோரைத் தாங்குபவர். துறவறத்தை மேற்கொள்ளுபவர் தம் ஆன்ம ஈடேற்றத்தின் நிமித்தம் அங்ஙனம் செய்கின்றனர். ஆனால் இல்லறத்தாரோ பரோபகாரிகள். அவர்கள் இல்வாழ்க்கையிலிருந்து உலகைத் தாங்குகின்றனர். இல்லிலிருந்து வாழ்வாங்கு வாழும் மக்கள் தவம் செய்யும் துறவிகளைக்காட்டிலும் சிறந்தவர். இல்லிலிருந்து அறவாழ்க்கை வாழ்பவர் வாழ்க்கையைத் துறந்து பெறும் பயன் யாதும் இல்லை. எனவே "அறம்" என்பது "இல்வாழ்க்கை" என அழுத்தந்திருத்தமாக வள்ளுவர் காட்டுந்திறன் மெச்சற்பாலது. மேல்வரும் குறள்கள் அவர் கருத்தை விளக்குவன.

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவதெவன்"

"ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை யுடைத்து"

"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன் பழிப்ப தில்லாயின் நன்று"

திருக்குறளுக்கு அடுத்தபடியில் வைத்து எண்ணத்தக்கது நாலடியார். இதுவும் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்னும் முப்பிரிவுகளையுடையது. வள்ளுவர் இல்லறத்தை வற்புறுத்த, சமண முனிவர்களோ துறவறத்தை வற்புறுத்துகின்றனர் என்பது நாலடியாரில் முதலாவதாக துறவறத்தைக் கூறுவதிலிருந்து தெரிகின்றது. செல்வம், யாக்கை, இளமை நிலையாமை இவற்றை வற்புறுத்துவது துறவறவியலில் விசேட இடம் பெறுகின்றது. திருக்குறளுக்கும் நாலடியாருக்கும் உள்ள பெரிய வித்தியாசம் யாதெனில் முன்னையதில் உலக மக்களுக்குப் பொதுவாகிய தருமம் விளக்கப்பட, பின்னையதில் துறவிகளுக்குச் சிறப்பாகிய தருமம் விளக்கப்பட்டுள்ளது. இனி, ஏனைய அற நூல்களைப் பற்றி ஆராய்வாம். நான்கு நீதிமணிகள் ஒவ்வொரு வெண்பாவிலும் கூறப்பட்ட 101 வெண்பாக்களின் தொகுதி "நான் மணிக் கடிகை" என்பது. இதனைப் பாடினர் விளம்பி நாகனர். இனியவை நாற்பது பூதஞ் சேந்தனாலும் இன்னா நாற்பது கபிலராலும் பாடப்பட்ட இரு நூல்கள். ஒவ்வொரு நூலிலும் 40 வெண்பாக்கள் உள்ளன. மக்களுக்கு உறுதிபயக்கும் இனிய நீதி மொழிகள் அடங்கியுள்ள நூல் இனியவை நாற்பது. உறுதிபயவாத தீச்செயல்கள் இவையென விளக்கப்பட்டுள்ள நூல் இன்னா நாற்பது. இந்நூலைப் பாடிய கபிலர் வேறு. சங்கச் செய்யுள்களைப் பாடிய கபிலர் வேறு. நல்லாதனர் என்னும் புலவராற் பாடப்பட்ட 100 வெண்பாக்கள் அடங்கிய நூல் "திரிகடுகம்" என்பது. இந்நூலில் உள்ள ஒவ்வொரு வெண்பாவிலும் மும்மூன்று நீதிகள் சொல்லப்பட்டுள்ளன. உதாரணமாக பின்வருஞ் செய்யுளை நோக்கலாம்.

அருந்ததிக் கற்பினர் தோளுந் திருந்திய
தொல்குடியின் மாண்டார் தொடர்ச்சியும்—
சொல்லின்
அரிகலற்றுங் கேள்வியார் நட்பு மிம் மூன்றும்
திரிகடுகம் போலு மருந்து.

பெருவாயின் முள்ளியாராற் பாடப்பட்ட 100 பாடல்களையுடையது ஆசாரக்கோவை. சிறு பஞ்சமூலம் என்பது காரியாசான் என்பவராற் பாடப்பட்ட 98 வெண்பாக்களை யுடையது. மாணவர்கள் விரும்பத்தக்க உலகப் பழமொழிகளையும் செய்திகளையுமுடைய இந்நூலுக்கு பின்வருஞ் செய்யுள் எடுத்துக்காட்டு,

பூத்தாலுங் காயா மரமுமுள மூத்தாலும்
நன்கறியார் தாமும் நனியுளர்—பாத்தி
விதைத்தாலும் நாருத வித்துள, பேதைக்கு
உரைத்தாலும் செல்லா துணிவு.

இப்பாட்டின் பொருள் வெளிப்படை. முதுமொழிக் காஞ்சி என்பது கூடலூர் கிழாரால் பாடப்பட்ட நூறு அடிகள் கொண்ட பத்து பத்துக்கள். கணிமேதையாரால் பாடப்பட்ட 80 வெண்பாக்களை யுடையது "ஏலாதி" என்னும் நூல். பழமொழி நானூறு என்னும் நூல் முன்னுறையரையர் என்பவரால் பாடப்பட்டது. திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி என்ற நூற்பெயர்களை நோக்குமிடத்து இவற்றைப் பாடிய சமண

முனிவர்கள் வைத்திய அறிவு பெற்றிருந்தரெனத் தெரிகிறது.

இனி, சங்கமருவிய, பல்லவர் காலப்பகுதிகளில் எழுந்த பக்திப் பாடல்களின் போக்கினை ஆராய்வாம். ஏறக்குறைய கி. பி. 5 ம் நூற்றாண்டு தொடக்கம் 10 ம் நூற்றாண்டுவரையுள்ள காலப்பகுதியில் தமிழ் நாட்டில் சைவ நாயன்மாரும் வைணவ ஆழ்வார்களும் அவதரித்து எண்ணிறந்த பக்திப் பாடல்களைப் பாடியுள்ளனர். சைவ நாயன்மார்களும் அடியார்களும் பாடிய திருப்பதிகங்கள் பன்னிரண்டு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. வைணவ ஆழ்வார்கள் பாடிய பாடற்றொகுதி நாலாயிரத்திவ்விய பிரபந்தம் என்பது. இந்நூல்கள் அத்தனையும் பக்திப் பாடல்களே. "பக்தி" என்பது உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. காதலுக்கும் பக்திக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. காதலில் ஈடுபட்ட ஆணோ, பெண்ணோ ஒன்றையே சிந்திப்பர். "இரண்டு" என்பது அவரகராதியில் யாண்டும் கிடையாது. காதல் உணர்ச்சியின் வாயிலாகத் தோன்றுவது. காதலிப்பவர் தமக்குப் பிடித்த பொருளை நேசிக்கிறார். நேசிக்கும் பொருளைத் தவிர ஏனையவற்றை அவர் சிந்திப்பதே யில்லை. இதுபோலவே பக்தியிலீடுபட்டோரின் செய்கையும். பழந்தமிழ் நாட்டில் மக்கள் பல கடவுளரை வணங்கினர். அவர் அன்பு பல கிளைகளாகப் பிரிந்து பல கடவுளரிடத்துஞ் சென்றது. ஆனால் பக்தி மார்க்கம் தென்னிந்தியாவில் தலையெடுத்த பின் பல கடவுளர்கள் இருந்த இடந் தெரியாமல் மறைந்து விட்டனர். சைவ சமயத்தவர் சிவன் ஒருவனையே முதற்கடவுளாகக் கொண்டனர். ஏனைய கடவுளர் சிவனின் புத்திரர் அல்லது இனத்தவர். வைணவ சமயத்தவர் திருமாலையே முழுமுதற் கடவுளாக வழிபடத் தொடங்கினர். சைவ நாயன்மார் பாடலில் சிவன் ஒருவரே யாண்டும் புகழப்படுகிறார், வைணவ ஆழ்வார் பாடலில் திருமால் ஒருவரே துதிக்கப் படுகிறார். இந்த பக்தி மார்க்கம் தென்னிந்தியாவில் தலையெடுத்ததன் பயனாகவே சைவ வைணவர்களுக்கிடையே போட்டி ஏற்பட்டது. சிவன் எது விதத்திலும் திருமாலுக்குக் குறைந்தவரல்லர் என்பது சைவ சமயத்தவரின் அசைக்க முடியாத நம்பிக்கை. இது போலவே வைணவர்கள் திருமாலைக் கருதுவர்.

சைவ சமய உலகில் சிவனுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவனை முழுமுதற் கடவுளாக வைத்துப் பிரபந்தங்கள் பாடியவர்களில் முதன்மையானவர் காரைக்கால் அம்மையார். இவர் வாழ்ந்த காலம் ஏறக்குறைய கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், திருவிரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி என்னும் மூன்று பிரபந்தங்களில் சிவன் ஒருவனையே அம்மையார் புகழ்கிறார். இவற்றுள் அற்புதத் திருவந்தாதி ஒரு பக்திப் பிரவாக நூல். இறைவனை நேரில் கூப்பிட்டுக் கதைப்பது போல் இவர் பாடல்கள் அமைந்துள்ளன. இறைவன் ஒருவனையே தான் நினைந்திருந்ததாகவும், அவன் திருவுருவத்தைக் காணாதே அவனுக்குத் தான் ஆட்பட்டதாகவும், அவனைத் கண்ணாரக் கண்டும், கையாரக் கூப்பியும் எண்ணாத எண்ணத்தால் எண்ணியும் வழிபடவேண்டுமென்றும் இறைவனிடம் முறையிடுகிறார்.

"எனக்கினிய எம்மானை ஈசனை யானென்றும்
மனக்கினிய வைப்பாக வைத்தேன்" என்கிறார்.

இவர் எடுத்தாளும் சொல்லாட்சியைப் பாருங்கள்! தனக்கு விருப்பமான இறைவனைத் தன் மனதில் "வைப்பாக வைத்தேன்" என்கிறார். "வைத்தலுக்கும்" "வைப்பாக வைத்தலுக்கும்" வித்தியாசம் உண்டல்லவா? காரைக்காலம்மையார் சிவனைத் தம் மனத்தில் வைப்பாக வைத்தபின் சிவனால் அவ்விடத்தை விட்டு நகரமுடியாதல்லவா? அம்மையாரின் பக்தி வைராக்கியமே அங்ஙனம் அவற்றைக் கூறச்செய்கிறது. மாணிக்கவாசகர் "சிக்கெனப் பிடித்தேன். எங்கெழுந்தருளுவதினியே" என இறைவனோடு சல்லாபஞ் செய்வதுபோன்று அம்மையாரும் செய்கிறார். இறைவனைப் பார்த்துக் கூறுகிறார்,

நீ யுலகமெல்லாம் இரப்பினும் நின்னுடைய
தீய அரவொழியச் செல்கண்டாய்—தூய
மடவரலார் வந்து பலியிடார் அஞ்சி
விட வரவம் மேலாட மிக்கு,

"இறைவா! நீ பிச்சை எடுப்பது எனக்குப் பிடிக்கவில்லை. அப்படி நீ பிச்சைக்குப் போனாலும் போகும் போது சிறக்கப்போ. உன்னுடைய நச்சுப் பாம்புகளைத் தோளில் போட்டுக்கொண்டு போகாதே! போனால் அப்பாம்புகளுக்குப் பயந்து இளம் பெண்கள் உன்னருகில் வந்து உனக்குப் பிச்சை தரமாட்டார்கள். ஆனபடியால் என் சொற் கேள்" என அம்மையார் இறைவனுக்குப் புத்திமதி புகட்டுதல் சிரிப்பைத் தருகின்றது. இவருடைய பக்திப் பாடல்களில் பல, இறைவனோடு சரச சல்லாபஞ் செய்யுந்தன்மையில் அமைந்துள்ளன. இவர் பாடல்கள் ஏனைய நாயன்மாருக்கு வழிகாட்டியாக இருந்தன என்று கூறவும் வேண்டுமா?

காரைக்காலம்மையாருக்குப் பின் முறையே அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் தோன்றி தென்னிந்திய கோயில்களைப் பீடிகையாகக்கொண்டு எண்ணிறந்த பக்திப்பாடல்களைப் பாடியுள்ளனர். சம்பந்தர் பாடல்கள் 1 ம், 2 ம், 3 ம் திருமுறைகளாகவும் அப்பர் பாடல்கள் 4 ம், 5 ம், 6 ம் திருமுறைகளாகவும் சுந்தரர் பாடல் 7 ம் திருமுறையாகவும், மாணிக்கவாசகரது

திருவாசகம் 8 ம் திருமுறையாகவும் பன்னிரு திருமுறையில் கோக்கப்பட்டுள்ளன. இந்நாயன்மார் நால்வரும் நான்கு படிகளில் நின்று இறைவனை அடைந்தனர். சைவ சமயத்தின்படி இறைவனை அடையும் பாதைகள் அல்லது மார்க்கங்கள் நான்கு. இவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. இவற்றுள் முதலாவது படி சரியா மார்க்கம்; அதாவது சரீரத்தினால் இறைவனுக்குத் தொண்டு செய்து முத்தியை அடைதல். அப்பர் சுவாமிகள் உழவாரத் திருப்பணிசெய்து இறுதியில் இறைவன் பாதத்தை அடைந்தமையின் சரியா மார்க்கத்தினின்று முத்திபெற்றவராகக் கூறப்படுகிறார். சம்பந்தரோ என்றால் வேதங்களை அறிந்த குழந்தை. அவர் நாளும் மந்திரங்களால் விக்கிரகத்தை வழிபட்டவர். அவர் நின்ற நிலை கிரியா மார்க்கம். சுந்தரர் ஒரு யோகி. சில சமயங்களில் தான் இரண்டு பெண்களை விவாகஞ் செய்யவேண்டுமென இறைவனைக் கேட்கிறார். சில நேரங்களில் புல்நுனிப் பனிபோன்று நிலையற்றது உலக வாழ்வு என்கிறார். இவரது சொல்லுக்கும் செயலுக்கும் முரண்பாடு காணப்படுவதால் இவர் ஒரு யோகி என்றும், மூன்றாவது படியாகிய யோக நிலையில் நின்று இறைவனை அடைந்தவராகவும் கூறப்படுகிறார். மாணிக்கவாசகர் நான்காவதாகிய ஞான மார்க்க நிலையில் நின்று இறைவனோடு இரண்டறக் கலந்தவர்.

சைவ நாயன்மார் பாடல்களுள் மாணிக்கவாசகர் பாடல்கள் பக்தியின் உச்சிச் சிகரத்தைக் காட்டுகின்றன. திருப்பெருந்துறையில் இறைவன் குருவடிவாக வந்து மாணிக்கவாசகருக்குத் தீக்கைசெய்து மறைந்துவிட்டார். அன்று தொடக்கம் தாயினைப் பிரிந்த கன்று தவிப்பதுபோல் ஊரூராக இறைவனைத் தேடி அலைகிறார் அவர். அவர் பாடிய திருவாசகம், திருச்சதகம் என்பன அவருக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பையே காட்டுகின்றன. தாயை இழந்த கன்று என்ன செய்யும்? தன் தாயின் நினைவு மாத்திரம் தூண்ட, "அம்மா", "அம்மா" என்று கதறி அழும். துயர் மிகுதியினால் மண்ணின்மேல் முகத்தை வைத்துப் புரண்டு புரண்டு அழும். பின் எழும்பிச் சிறிது தூரம் ஓடும். இது போன்றதே மாணிக்கவாசகரின் தன்மையும். தான் அன்று கண்ட இறைவன் எங்கே போய் மறைந்தான்? ஏன் மறைந்தான்? என்பது அவரது வினா. "உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லாது எங்கள் உத்தமனே" என்கிறார் ஒரு முறை. பின்,

"யாரொடு நோகேன் ஆர்க்கெடுத்துரைக்கேன்
ஆண்ட நீ அருளிலையானால் வார்கடலுலகில்
வாழ்கிலேன் கண்டாய்"

வருக என்றருள் புரியாயே? என்கிறார். இந்த அடிகளைச் சிந்திக்கும்போது, "திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்" என்னும் ஆன்றோர் வாக்கு ஞாபகத்துக்கு வருகின்றது. உலகில் வைராக்கியம் பிடித்த மக்கள் என்ன செய்வர்? தாம் விரும்பியதைச் சாதிக்கும் வரை சலிப்பெய்தார். மாணிக்கவாசகருக்கு இறைவனைச் சிக்கெனப்பிடிக்கவேண்டுமென்ற ஒரே எண்ணமே உண்டு. இறைவனை அடையும் வரை உலக விஷயங்களைச் சிந்தியாது அவன் அடியையே நினைந்து நினைந்து அழுதார். ஈற்றில் இறைவனைச் சிக்கெனப்பிடித்து அவனுடன் இரண்டறக் கலந்தார்.

பக்திப் பாடல்களைப் பாடிய வைணவ ஆழ்வார்களுள் காலத்தால் முந்தியோர் பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய முதலாழ்வார் மூவருமாவர். இவர்கள் திருமாலின்மீது தமக்குள்ள பக்தியைத் தனித்தனி 100 வெண்பாக்களில் சித்தரித்துள்ளனர். இம்மூவரும் வாழ்ந்த காலம் ஏறக்குறைய காரைக்காலம்மையார் காலமாகும். இவர் காலத்துக்குப்பின் பெரியாழ்வார், நாச்சியார், குலசேகரப் பெருமான், திருமழிசைப்பிரான், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் என்போர் தோன்றி எண்ணிறந்த பாடல்களைப் பாடியுள்ளனர்.

பெரியாழ்வார் காலம் ஏறக்குறைய எட்டாவது நூற்றாண்டாகும். இவரின் மகளே நாச்சியார் அல்லது ஆண்டாள் என அழைக்கப்பட்டவர். நாச்சியார் பாடல்கள் திருமொழி, திருப்பாவை என்பன. திருமாலை நாயகனாக வரிக்கவேண்டுமென்ற ஒரே ஆசை அவரைத் தூண்ட அவனழகில் ஈடுபட்டு அவனைத் தேடி அலைகிறார் நாச்சியார். அவனைப் பற்றி கனாக்காண்கிறார். படுக்கையிலிருந்து புலம்புகிறார்.

"தந்தையும் தாயும் உற்றாரும் நிற்கத்
தனிவழி போயினாள் என்னும் சொல்
வந்த பின்னைப் பழிகாப் பரிது மாயவன்
வந்துருக் காட்டுகின்றான்"

ஆகையால் என்னைக் கொண்டுபோய் திருமாலின் கோயில் வாசலில் விட்டு விட்டு வாருங்கள் எனத் தோழியரை வேண்டுகிறாள். நாச்சியார் பாடிய திருமொழி, சிற்றின்பக் காதலைப் புலப்படுத்தும் ஒரு நூல் போல் ஒருமுறை படிப்பவர்க்குத் தென்படுகிறது. அவர் நூலைத் திருப்பித் திருப்பிப் படிக்கும்போது அவர் அனுபவம் பேரின்பக் காதலே என்பது தெளிவாகும். நாச்சியார் பாடிய திருப்பாவை, மாணிக்கவாசகர் பாடிய திருவெம்பாவையைப் போன்றது.

வைணவ ஆழ்வார்களுள் நம்மாழ்வார் பாடிய திருவாய் மொழி பக்திச் சிகரத்தின் உச்ச நிலையைக் காட்டுகின்றதெனலாம். அவர் வாழ்ந்த காலம் ஏறக் குறைய பத்தாம் நூற்றூண்டு அல்லது மாணிக்கவாசகர் காலமாகும். மாணிக்கவாசகர் பாடல்களுக்கும் நம் மாழ்வார் பாடல்களுக்கும் பெரிய ஒற்றுமை உண்டு. இறைவனேடு இரண்டறக் கலக்கவேண்டும் என்ற ஒரே ஒரு ஆசை நம்மாழ்வாரின் மனதைத் தூண்ட இறை வனைத் தேடித்தேடி அலைகிருர். இவர் ஒரு பாரந்த நோக்குடையவர். திருமாலைப் பரம்பொருளாகவும் இறைவனுகவும் காண்கிருர். மாணிக்கவாசகர் "நினைப் பற நினைந்தேன், நீயலாற் பிறிதுமற்றில்லை" எனப்பாட, இவர் "நின்று நின்று நினைக்கின்றேன் உன்னை எங்ஙனம் நினைக்கிற்பன்" என்கிருர். மாணிக்கவாசகர் "சிக்கெனப் பிடித்தேன், எங்கெழுந்தருளுவது இனியே" என்கிருர். நம்மாழ்வாரோ "உன்னை நான் அடைந்தேன் விடுவேனே" எனக் கேட்கிருர். நம்மாழ் வாரின் மூன்ருந் திருவாய்மொழியிலுள்ள பின்வரும் பாடல், மாணிக்கவாசகர் பாடல்களின் சாயலைக்காட்டு வதுபோற் காணப்படுகிறது.

"என தாவியுள் கலந்த
பெரு நல்லுதவிக்
கைமாறு
என தாவி தந்தொழிந்
தேன் இனி மீள்வ
தென்பதுண்டே?
என தாவி யாவியும் நீ
பொழிலேழுமுண்ட
எந்தாய்!
என தாவி யார்? யான்
ஆர்? தந்த நீ
கொண்டார்க்கினையே"



பிரதமர் மல்வத்தை பௌத்த மதப்பிரிவு நிலயத்தில் பிரித் ஓதும்போது கேட்டுக்கொண்டிருக்கிருர்.

## அரசாங்க பிரசுர நிலையத்தில் பெறக்கூடிய நூல்கள்

| | விலை ரூ. ச. | தபாற் செலவு ரூ. ச. |
|---|---|---|
| 1956 ம் ஆண்டின் 21 ம் இலக்க வெடிமருந்துச் சட்டம் .. | 0 45 | 1 10 |
| 1956 ம் ஆண்டின் 51 ம் இலக்க, முஸ்லீம் பள்ளிவாசல்கள், தரும நம்பிக்கைச் சொத்துக்கள் அல்லது வக்புகள் சட்டம் .. | 0 85 | 0 20 |
| 1936 ம் ஆண்டின் 16 ம் இலக்கம், ஒத்துழைப்புச் சங்கங்களின் அமைப்பு முறையும் அதிகரிப்பையும் பற்றிய நியாயப் பிரமாணத்தைத் திரட்டித் திருத்துவதற்கான சட்டம் .. .. | 0 25 | 0 20 |
| 1945 ம் ஆண்டின் 43 ம் இலக்கச் சட்டம் ஸ்தல அரசாங்க சேவையை அமைப்பது ஒழுங்குபடுத்துவது முதலிய ஏற்பாடு செய்வதற்கான ஒரு சட்டம் .. .. .. | 0 40 | 0 20 |
| கிராமச் சமுதாயச் சட்டத்தின் (அத்தியாயம் 148)—மறுபதிப்பு .. | 1 30 | 0 25 |
| 1947 ம் ஆண்டின் 17 ம் இலக்கம், கிராம சமுதாயச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டம் .. .. .. | 0 10 | 0 10 |
| 1953 ம் ஆண்டின் 1 ம் இலக்க நெற்காணிச் சட்டம் .. | 0 35 | 0 15 |
| 1939 ம் ஆண்டின் 31 ம் இலக்கச் சட்டம் கல்வி அபிவிருத்திக்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யவும் அதைப்பற்றிய நியாயப் பிரமாணத்தைத் திருத்தித் திரட்டுவதற்கான சட்டம் .. .. | 0 45 | 0 20 |
| 1946 ம் ஆண்டின் 32 ம் இலக்கச் சட்டம்—நீர்ப்பாசனத்தைப்பற்றிய நியாயப் பிரமாணத்தைத் திருத்தித்திரட்டுவதற்கான சட்டம் .. | 1 10 | 0 20 |
| 1951 ம் ஆண்டின் 13 ம் இலக்க முஸ்லீம் விவாக, விவாகரத்துச் சட்டம் .. | 1 50 | 0 20 |
| 1954 ம் ஆண்டின் 31 ம் இலக்க முஸ்லீம் விவாக விவாகரத்து (திருத்த)ச் சட்டம் .. .. .. | 0 10 | 0 10 |
| அத்தியாயம் 104 தத்துவப் பத்திரங்கள் .. .. | 0 20 | 0 10 |
| அத்தியாயம் 120—வியாபாரப் பெயர்கள் .. .. | 0 40 | 0 10 |
| 1951 ம் ஆண்டின் 17 ம் இலக்க பிறப்பு இறப்புப் பதிவுச் சட்டம் .. | 1 35 | 0 20 |
| 1953 ம் ஆண்டின் 15 ம் இலக்க பிறப்பு இறப்புப் பதிவு (திருத்த)ச் சட்டம் .. | 0 15 | 0 10 |
| 1954 ம் ஆண்டின் 30 ம் இலக்க பிறப்பு இறப்புப் பதிவு (திருத்த)ச் சட்டம் .. | 0 10 | 0 10 |
| 1954 ம் ஆண்டின் 19 ம் இலக்கச் சட்டம்—தாங்கள் செய்துவரும் வேலைக் கிரமத்திற் சேதமடையும் வேலையாட்களுக்கு நஷ்ட பூர்த்திப் பணம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கான சட்டம் .. | 0 35 | 0 20 |
| 1935 ம் ஆண்டில் ஏற்படுத்திய வேலையாட்கள் நஷ்ட பூர்த்தி விஷய ஒழுக்க விதிகள் .. .. .. | 0 35 | 0 20 |
| அத்தியாயம் 91—நொத்தாரிஸ்மார் (1938 ல் திருத்தியமைக்கப்பட்டது) .. | 1 30 | 0 35 |
| 1935 ம் ஆண்டின் 19 ம் இலக்கச் சட்டம்—இலங்கையிலே முடிக்குரிய காணியின் கிரமமான பண்படுத்தலுக்காகவும் பராதீனப்படுத்துதலுக்காகவும் ஏற்பாடுசெய்வதற்கான சட்டம் .. .. | 0 55 | 0 35 |
| 1946 ம் ஆண்டின் 3 ம் இலக்கச் சட்டம்—ஊர்ச்சங்கங்கள் .. | 2 90 | 0 35 |
| 1941 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சட்டம்—வேலையாட்கள் சம்பளச் சங்கச் சட்டம் .. .. .. .. | 0 50 | 0 20 |
| அத்தியாயம் 95, கலியாணப் பதிவுச் சட்டம் .. .. | 0 55 | 0 20 |
| 1945 ம் ஆண்டின் 20 ம் இலக்க கலியாணப் பதிவுச் திருத்தச் சட்டம் | 0 50 | 0 10 |

அரசாங்க பிரசுர நிலைய அதிபர், தபாற் பெட்டி இலக்கம் 500, கொழும்பு என்ற விலாசத்தில் நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகவற் பகுதியினருக்காக, இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.